DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1378
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 2, 2022

# Ontario's Premier Ford meets with Prime Minister Trudeau at Queen's Park

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் — கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் குயின்ஸ் பார்க் பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தனர்



ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் கடந்த செவ்வாய்கிழமையன்று. குயின்ஸ் பார்க் என்று அழைக்கப்பெறும் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்ற வளாகத்தில் கனடாவின் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ அவர்களைச் சந்தித்து, சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பில் தற்போதைய அழுத்தங்கள் மற்றும் வீட்டுவசதி, தொழிலாளர் மற்றும் அவசியமான தொழிற்துறைகளில் உள்ள வேலையாட்கள் பற்றாக்குறை, குடியேற்றம் மற்றும் பிற விடயங்கள் தொடர்பாக நீண்ட நேரம் உரையாடினார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)



# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எப்போது நீதி கிடைக்கும்? நீதி தாமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் நீதி மறுக்கப்படுகின்றது!

கட்டுரையாளர் :— ஜோசப் நயன்

காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகப்பெரியதொரு மனித உரிமை மீறல் ஆகும் உலகில் பல நாடுகளில் காணமல் ஆக்கப்படுதல் என்பது இன்றும் சர்வசாதரணமாக இடம் பெற்று வருகின்ற விடயமாகும்

உலக நாடுகளில் கிளர்சியாளர் குழுக்களாலும் இரானுவத்தாலும் அரசியல் சார்ந்த காரணங்களாலும் தனி மனிதனோ அல்லது குழுக்களோ மக்கள் தொகுதியோ காணமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் இன்றும் அரங்கேரித்தான் வருகின்றது.

(உள்ளே விபரமான கட்டுரை 11ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 | 905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**


# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை. **Keele and Hwy 7**
**(1) 7am - 3pm**
**(2) 11pm - 7am**
ஆண், பெண் இருபாலர்களும் தேவை.
தொடர்பு: ஷங்கர்
**416-305-0264**


## வேலை வாய்ப்பு

**Downtown Toronto** வில் **Church & Wellesley சந்திப்பிற்கு அருகில் Cooks Dish Washers/ Kitchen Helpers ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆட்கள் உடனடியாகத் தேவை. Part-Time or Full Time விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு:**
416-414-2241

## குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை.
அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:- 416 844 4207
அல்லது 416 510 8727



## லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

## House for Rent

Taunton / Simcoe

சந்திப்பிற்கு அருகில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
Close to UOIT
and all other amentities.

Call:
(647) 534-8238

## Bakery உதவியாளர்கள் தேவை

Oshawa நகரில் உள்ள Bakery ஒன்றுக்கு Bakery உதவியாளர்கள் தேவை. Part-Time or Full Time வாய்ப்புக்கள் உண்டு.
சுவையான இலங்கை பாண் மற்றும் பணிஸ் செய்யும் அனுபவம் விரும்பத்தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 416-880-4645





REALTOR®
RE/MAX M METROPOLIS
Cell: **647-929-7242**
Email: brintha.uruthira@gmail.com
Instagram: brinthau

RE/MAX METROPOLIS REALTY BROKERAGE
8321 KENNEDY ROAD, UNIT 92
MARKHAM, ON L3R 5N4

உதயன் கதிரோட்டம்

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.


பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |


Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# கோட்டாபாய மீண்டும் நாட்டுக்குச் செல்வது, நாட்டு மக்கள் விரும்பாத ஒரு செயல்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் அங்கு தற்போது நிலவும் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக விளங்கிய ராஜபக்ச குடும்பத்தின் முக்கிய சகோதரருமான கோட்டாபாய மீண்டும் இலங்கைக்கு செல்லவுள்ளார் என்ற வதந்திகள் பரவி நிற்கும் நிலையில், இவ்வாரக் கதிரோட்டத்தை வடிக்கும் வழியில் நாம்.

எனினும் இலங்கை என்னும் மாங்கனித்தீவு பற்றிய ஒரு பார்வைக் கோர்வையாக இந்த வாரக் கதிரோட்டம் அமைய வேண்டும் என்ற விருப்பத்தோடு இருக்கையில் கோட்டாபாய மீண்டும் நாட்டுக்குச் செல்வது என்று தீர்மானித்துள்ளார் என்றும் அவருக்குரிய பாதுகாப்பை வழங்க நாட்டின் அநியாயம் செய்யும் அரசியல்வாதிகளின் நண்பர்களாக விளங்கும் ரணில் விக்கிரமசிங்க ஒரு ‘அக்கிரமசிங்க’ வாக மாறித்தான் இந்தச் செயலைச செய்கின்றாரா என்பதையும் நாம் நோக்க வேண்டியுள்ளது. அவரை நாட்டை விட்டு விரட்டிய அந்த நடுத்தர மற்றும் அடித் தட்டு மக்கள் என்ன செய்வார்கள் என்பதும் இது மக்கள் விரும்பாத ஒரு செயல் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டாலும். அவற்றை மரியாதை செய்து ஏற்றுக்கொள்ள எப்போது தயாராகவே உள்ளார்கள் என்பதும் நமக்குத் தெரிந்த விடயமாகவே உள்ளது.

கோட்டாபாய நாட்டு மக்களால் சபிக்கப்பட்டாரா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவிட்டாலும் கோட்டாபாய இராஜபக்சா தனது சிம்மாசனத்தை இழந்து தப்பி ஓடினா என்பதே உண்மை.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டா நியமிக்கப்பட்ட போதும் பின்னர் அவர் இலங்கையின் ஜனாதிபதியான தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் இலங்கையில் ஒரு ‘இராஜபக்ச இராஜ்யம்’ உருவாகப்போகின்றது என்ற கருத்தை சிங்கள முற்போக்கு சக்திகள் பல முன்வைத்தன.

அந்தக் காலப்பகுதியில் சர்வாதிகாரி என்ற வார்த்தைக்கு அப்போதைய பிரதமர் ரணில் மிகவும் சிறப்பான சிங்கள அர்த்தத்தை கொடுத்தார். சர்வாதிகாரி என்னும் ஒரு சொல். ஒரு அழிவை ஏற்படுத்துபவர் என்று உள்ளர்த்தம் கொண்டது என்பதை அந்த நண்பர் சொல்லக் கோட்டேன் என்பது என்று அவர் கூறினார்.

இப்போது, ரணில் தனது ஜனாதிபதி பதவியை காப்பாற்ற முடியும் என்று நினைக்கிறார். ஆனால் நடந்ததோ என்னவோ, ரணில் போராட்டத்தை கேலி செய்து அதை இல்லாதொழித்து, கோட்டா பாய மீண்டும் இலங்கைக்கு வருவதற்கான பாதையை உருவாக்கியிருக்கிறார்.

எனினும் நாட்டு மக்கள் விரும்பாத ஒரு செயலைச் செய்துள்ள கோட்டாபாயவும் அதற்கு உடந்தையாக உள்ள ரணிலும் தேசத்தின் நன்மை கருதி தங்கள் பதவி ‘ஆசை’ யை சில வருடங்களுக்கு ஒதுக்கி வைத்து விடுவதை சிறந்தது என்பதும் எமது கருத்தாகும்.




கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான்" அவர்களுக்கு இரண்டு அரச கௌரவங்கள்




## அவரை தனது உத்தியோகபூர்வ இருக்கையில் மகிழ்ச்சியுடன் அமரச் செய்த ஒன்றாரியோ மாநகர முதல்வர் டக் போர்ட்

## அவரது பெயரில் மார்க்கம் நகரசபை எல்லைக்குள் ஒரு வீதிப் பலகையை திறந்து வைத்த மார்க்க நகரசபை மேயர் பிராங்க் ஸ்கெபட்டி

கடந்த வாரம் கனடாவிற்கான இசைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்த "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான்" அவர்களுக்கு இரண்டு அரச கௌரவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதை கனடா வாழ் இந்திய மற்றும் இலங்கை மக்கள் பாராட்டி அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.



"இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான்" அவர்களை தனது குயின்பார்க் அலுவலகத்திற்கு அழைத்து தனது உத்தியோகபூர்வ இருக்கையில் மகிழ்ச்சியுடன் அமரச் செய்து பெருமையுடன் அவரைப் பாராட்டினார் ஒன்றாரியோ மாநகர முதல்வர் டக் போர்ட். இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஆவார் இந்த நிகழ்வு திங்கட்கிழமை நடைபெற்றது.

மேலும் அவரது பெயரில் மார்க்கம் நகரசபை எல்லைக்குள் ஒரு வீதிப் பலகையை திறந்து வைத்தார் மார்க்க நகரசபை மேயர் பிராங்க் ஸ்கெபட்டி. அத்துடன் அவரை தனது அலுவலகத்திற்கு அழைத்துப் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார் மேயர் அவர்கள். இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று காலை மார்க்கம் நகரில் நடைபெற்றது.

மார்க்கம் நகரில் மாநகர சபை எல்லைக்குள்ள ஒரு பகுதியில் வீதி ஒன்றுக்கு இசைப் புயல் ஏ. ஆர். ரஹ்மானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மார்க்ம் மாநகர மேயர் பிராங்க் ஸ்காபெட்டி மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். அங்கு உரையாற்றும் போது "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான்" அவர்கள் தனது வாழ்வில் இவ்வாறான ஓர் கௌரவிப்பு கிடைக்கும் என கற்பனை கூட செய்து பார்த்தது கிடையாது என தெரிவித்தார்.

மார்க்ம் மாநகர மேயர், இந்திய உதவித் தூதுவர் அபூர்வா ஸ்ரீவட்சவா மற்றும் கனேடிய மக்களுக்கு நன்றி பாராட்டுவதாகவும் "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான்" அவர்கள் தெரிவித்துள்ளார்.

தனது இசைத் துறைப் பயணத்தில் இந்தியாவில் தன்னுடன் இணைந்து பயணித்த அனைவருக்கும் நன்றி பாராட்டிக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். இசை சமுத்திரத்தில் தான் ஓர் துளி மட்டுமே என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான விடயங்கள் மூலம் தாம் இன்னமும் ஊக்கப்படுத்தப்படுவதாகவும் இன்னும் பொறுப்புக்கள் அதிகரிப்பதாகவும், களைப்படைந்தாலும் மக்களுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் எஞ்சியிருப்பதாக நினைவூட்டப்படுவதாகவும் அவர் தனது முகநூல் பக்கத்திலும் தெரிவித்துள்ளார்.

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்.**

- LJI Journalists Ganesh and Arjune

# நடேஸ்வராக்கல்லூரி பழையமாணவர் சங்க ஒன்றுகூடல் — 2022

**- குரு அரவிந்தன்**







கனடாவில் இயங்கிவரும் நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் ரொறன்ரோவில் உள்ள மிலிக்கன் பூங்காவில் சென்ற சனிக்கிழமை 27-8-2022 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நீண்ட நாட்களின் பின் வெவ்வேறு காலகட்டங்களில் படித்த சங்க அங்கத்தவர்கள் ஒன்றாகச் சந்தித்து உரையாடவும் முடிந்தது. காலை உணவைத் தொடர்ந்து, வருடாந்த பொதுக்கூட்டம் காலை 11:00 மணியளவில் நடைபெற்றது. அங்கத்தவர்களின் கலந்துரையாடலைத் தொடர்ந்து மதியஉணவும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரி 120 வருடங்களை நிறைவு செய்ததை 2021 ஆண்டு கொண்டாடும் முகமாக நினைவுக் கோப்பைகளும், நினைவு ரீசேட்களும் பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டாலும், கோவிட்-19 காரணமாக அவற்றை வழங்க முடியாமல் இருந்தது. இந்த ஒன்றுகூடலின்போது, சிறப்பு விருந்தினருக்கும், நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் அவற்றை வழங்கியதன் மூலம் அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க பாடசாலைகளை ஆரம்பித்து மதமாற்றங்களை மேற்கொள்ள முற்பட்டபோது, இந்துமத நம்பிக்கை கொண்டவர்கள் நடேஸ்வரா, பரமேஸ்வரா, வைத்தீஸ்வரா, இந்துக்கல்லூரி, மகாஜனா போன்ற தனியார் பாடசாலைகளை இந்து மாணவர்களுக்காக அப்போது ஆரம்பித்தது நினைவிருக்கலாம்.

"பொலியும் ஆழி வளங்கள் யாவும் நிறை காங்கேசந்துறையிலே
பொறையில் "நேர்மை நெறிநில்"
நீதி அறிவை ஊட்டும் முறையிலே
கலை நலங்கள் எழில் பெறும்
நடேஸ்வரா கல்லூரியில்"

என்று சுப்பையா ஆசிரியர் இயற்றிய கல்லூரிக்கீதத்தில் குறிப்பிட்டது போல, இப்போது இங்குள்ள வளங்கள் எல்லாவற்றையும் மாணவர்களுக்குப் பதிலாக இராணுவமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காங்கேசந்துறை பகுதி பிரகடனப் படுத்தப்பட்டதால், கல்லூரிவீதியில் இருந்த நடேஸ்வராக்கல்லூரி இயங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. யுத்த சூழ்நிலைகாரணமாகப் காங்கேசந்துறை நடேஸ்வராக்கல்லூரி பல பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருந்தது. ஊர்மக்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் விடா முயற்சியால் மீண்டும் பழைய இடமான கல்லூரிவீதியில் கல்லூரி இயங்க ஆரம்பித்தது. புதிய கட்டிடம், விளையாட்டு மைதான கட்டிடம் போன்றவற்றை அமைப்பதற்குப் பழைய மாணவர் சங்கங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன.

மக்கள் இடம் பெயர்ந்ததாலும், கல்லூரிவீதியின் ஒருபகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாலும் வருகைதரும் மாணவர்கள் தொகை குறைவாகவே இருக்கின்றது. கல்லூரியின் கிழக்குப்பக்கத்தில் இருந்து வரும் மாணவர்கள் வடக்கு நோக்கிப் பருத்துறைவீதி வழியாக காங்கேசந்துறை சந்திவரை சென்று சுற்றுப் பாதையால்தான் கல்லூரிக்கு நடந்து வரவேண்டிய நிலை இப்போது இருக்கின்றது. அதனால் வளர்ந்த பெண் பிள்ளைகளை அனுப்பப் பெற்றோர்கள் தயக்கம் காட்டுவதால், வசதி படைத்தவர்கள் வேறுபாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றார்கள். ஒன்றுபட்டுச் செயற்பட்டால் இந்த நிலையை விரைவில் மாற்றி பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கை இன்னும் காங்கேசந்துறை மக்களிடையே இருக்கின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் எந்தவிதமான நன்மைகளும் எட்டப்படவில்லை என்பது உண்மை

## மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் சகாயம் திலீபன்

இலங்கையின் போரியல் வரலாற்றில் நீண்ட கால யுக்தியாக வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இலங்கையின் அரச படைகளால் மட்டுமல்லாது பல்வேறு ஆயுத குழுக்களாலும் பல்வேறு தரப்புக்களாலும் இடம் பெற்றுள்ளமை பல தசாப்தங்களாக இடம்பெறும் மனித உரிமை மீறலாக கருதப்பட்டு வந்தாலும் இன்றும் பல்வேறு கடத்தல் சம்பவங்கள் பதிவாகின்றமை சமூகத்தில் தனி மனித சுதந்திரம் மறுக்கப்படுகிறது என்பதை வலியுறுத்தி கூறுகின்றது என மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் சகாயம் திலீபன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை (30) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், இறுதி யுத்தத்திற்கு முற்பட்ட காலங்களிலும் பின்னரான காலங்களிலும் வெள்ளை வேன் கடத்தல், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், அரச படைகளால் கடத்தப்பட்டவர்கள் ,வயது வித்தியாசம் இன்றி இலங்கை அரச தரப்பு படைகளால் கைது செய்யப்பட்டவர்கள் என இப் பட்டியல் நீண்டு போவதை பார்க்கின்றோம்.

இலங்கையின் போர்ச்சூழல் ஆரம்ப கால பகுதியில் இருந்து மனித கடத்தல் அல்லது வலிந்து காணாமல் போகச் செய்தல் எனும் மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளது என்பதற்கு சான்றாக இன்றும் உறவுகளை தொலைத்துவிட்டு வீதிகளிலும் வீதியோர கொட்டகைகள் அமைத்து வயோதிப தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்காகவும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் கண்ணீரோடு தெருத்தெருவாக தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிவதற்காக மழையிலும் வெயிலும் சமூகத்தின் ஏளனப் பார்வைக்கு மத்தியிலும் உன்னதமான உயிரோட்டமான தொரு போராட்டம் வடக்கு கிழக்கு தமிழர் வாழ்கின்ற பகுதிகளில் மக்கள் மயப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் எதிர் பார்ப்புக்களுக்கும் இலங்கை அரசாங்கம் இதுவரை நியாயமான ஒரு பொறிமுறையை முன்வைக்கவில்லை. இங்கே பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த கோசமும் நியாயமான சர்வதேச விசாரணையை நோக்கியதாகவே அமைந்திருக்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான போர் குற்றங்கள் சர்வதேச ரீதியில் விசாரிக்கப்பட வேண்டும் என்ற மக்களின் அங்கலாய்ப்புக்கு பூகோள அரசியல் இடம் தரவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற கடந்த அரசாங்கத்தில் கூட சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் எந்தவிதமான நன்மைத்தனங்களும் அல்லது நீதியான விசாரணைகளுக்கான எந்த முன்னெடுப்புகளும் இதுவரை எட்டப்படவில்லை என்பது நிதர்சனமான உண்மை.





2009ம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின் நாட்களில் இருந்து இற்றைவரை 115க்கும் மேற்பட்ட தாய்மார் தங்களுடைய பிள்ளைகளை தேடிய நியாயமான தேடலில் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டு மரணத்துள்ளனர். இவர்களது மரணம் சாதாரணமல்ல. வலிகளை சுமந்த சாட்சியங்கள் இந்த இறப்புக்களின் மூலம் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.



தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமானது என்ற நிலைக்கு வர வேண்டியுள்ளது. இன்று சமூகத்தில் உள்ள பொருளாதார நெருக்கடிக்குள் மிகவும் பாதிக்கப்படும் ஒரு தரப்பாகவும் இந்த குறிப்பாக கணவர் காணாமலாக்கப்பட்டடு பிள்ளைகளுடன் வாழும் இளம் தாய்மார்களின் இன்றை நிலை பெண்தலைமைக் குடும்பங்களாக சொல்ல முடியாத துயரங்களை சுமந்து வாழ்ந்து தங்களின் உறவுகளுக்காக தொடர்ந்து வீதிகளில் இறங்கி போராடி வருகின்ற அம்மாக்களை நிலையை கண்கூடாக பார்க்க முடிகிறது.

அவர்களுடைய உறவுகளை தேடிய போராட்டத்தில் பொது மக்களும் பங்குதாரராக மாற வேண்டும். இந்த காணாமல் ஆக்கப்படும் சந்தர்ப்பங்கள் தனி குடும்பங்களுக்கு நேர்ந்த மனித உரிமை மீறல்கள் அல்ல மாறாக இது யுத்தத்தின் ஒரு வகை தந்திரோபாய செயற்பாடாகவே கருதுகின்றோம்.

இறந்துபோணவர்களுக்கு ஒரு நினைவேந்தல் செய்வதன் மூலம் உளவியல் ரீதியாக ஆறுதல் கிடைக்கும் ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாது உண்மை நிலையை கண்டறிவதற்கான அம்மாக்களின் போராட்டத்தில் இன்று அப்பாவின் முகங்களை மறந்த சின்னஞ் சிறார்களும் கடைசி காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளை கூட செய்வதற்கு பிள்ளைகளின்றி வாழும் பெற்றோர்கள் என நீண்டுகொண்டே போகும் வலிகளின் கதைகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இந்த தாய்மார்கள் செய்யும் அறவழி போராட்டத்தின் மூலம் சர்வதேசத்தின் உதவியுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். இவர்களுக்கான நீதி பொறிமுறை மற்றும் பொறுப்புக்கூறல் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

அதுவரை எமது அம்மாக்களுடைய போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எமது முழுமையான ஒத்துழைப்புகள் இருக்கும் என்பதை கூறி நிற்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE

RIGHT BROKER = RIGHT MORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# துபாய் தீவில் ரூ.650 கோடிக்கு பிரமாண்ட பங்களா வாங்கிய அம்பானி

உலக செய்திகள்
World News



பாம் ஜுமைரியா தீவில் 80 மில்லியன் டாலர் மதிப்பு வில்லாவை முகேஷ் அம்பானியின் ஆர்ஜஸல் நிறுவனம் வாங்கியுள்ளது. உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான ரிலையன்ஸ் இன்ஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் முகேஷ் அம்பானி, சமீப காலமாக வெளிநாடுகளில் சொத்துகளை வாங்கி குவித்து வருகிறார். கடந்தாண்டு லண்டனில் பிரமாண்டமான பண்ணை வீட்டை அவர் வாங்கியது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், துபாயிலும் அவர் புதிய சொத்தை வாங்கியுள்ளார். துபாயின் மிகவும் பிரபலமான தீவு பாம் ஜுமைரியா. இது பனை மரம் போன்ற வடிவத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவாகும். இங்கு முகேஷ் அம்பானி ரூ.650 கோடி மதிப்புள்ள ஆடம்பர பங்களாவை (வில்லா) வாங்கியுள்ளது. தனது இளைய மகன் ஆனந்த்துக்காக இந்தாண்டு தொடக்கத்தில் இதை அவர் வாங்கியுள்ளார். முக்கியமான வர்த்தக, சுற்றுலா நகரமான துபாயில் இதுவரை யாரும் வாங்கிடாத வகையில் முதல் முறையாக மிகப்பெரிய தொகைக்கு இதை அவர் வாங்கி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. பாம் ஜுமைரியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள இந்த வில்லாவில், 10 படுக்கையறைகள் உள்ளன. ஒரு ஸ்பா, உள் மற்றும் வெளிப்பகுதியில் நீச்சல் குளம் அமைந்துள்ளது. துபாய் அரசானது தற்போது உலக நாடுகளில் இருக்கும் பிரபலங்களுக்கு கோல்டன் விசாவை வழங்கி வருகிறது மேலும், வெளிநாட்டினர் சொத்துகளை வாங்குவதற்காக ரியல் எஸ்டேட் விதிமுறைகளையும் பெரியளவில் தளர்த்தியுள்ளது. அம்பானி வாங்கியுள்ள வில்லாவுக்கு அருகில், பாலிவுட் நடிகர் ஷாருக்கான், இங்கிலாந்து கால்பந்து வீரர் டேவிட் பேக்ஹாம், அவரது மனைவி உள்ளிட்டோரும் குடியிருப்பை வாங்கி உள்ளனர்.

# சோனியா காந்தியின் தாயார் இத்தாலியில் காலமானார்





சோனியா காந்தியின் தாயார், பாவ்லா மைனோ உடல்நல குறைவால் காலமானார் என ஜெய்ராம் ரமேஷ் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். சோனியா காந்தியின் தாயார், பாவ்லா மைனோ உடல்நல குறைவால் ஆகஸ்ட் 27-ஆம் தேதி சனிக்கிழமை அன்று இத்தாலியில் உள்ள அவரது வீட்டில் காலமானார் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர், பொறுப்பாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். சோனியா காந்தியின் தாயாரின் இறுதிச்சடங்கு நேற்று நடைபெற்றது என்றும் பதிவிட்டுள்ளார்.

# இனப்படுகொலை யுத்த குற்றத்திற்கான போதிய ஆதாரங்களை கூட்டமைப்பு வழங்கியுள்ளது - வினோ நோகராதலிங்கம் - MP



"கடந்தகாலங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பு போதிய ஆதாரங்களை இனப்படுகொலை யாக இருந்தாலும் யுத்த குற்றங்களாக இருந்தாலும் அனைத்திற்குமான ஆதாரங்கள் ஆரம்பகாலங்களிலே ஜெனீவாவிற்கு வழங்கியுள்ளது எனவும் தற்போது நடைபெற இருக்கின்ற கூட்டத்திற்கான ஆதாரங்கள் விசேடமாக வழங்கவேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விநோ னோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

"ஜெனீவாவில் போர்குற்றம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கான போதியளவு சான்றிதழ்கள் வழங்கவில்லை என தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளார்கள்" இது தொடர்பில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாளில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது, "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் ஒ.எம்.பி அலுவலகம் தேவை என்பது அவர்களின் கோரிக்கை.

உள்ளக பொறி முறையுடன் தீர்வினை எட்டுவதற்கான அலுவலகத்தினை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள்.

சர்வதேச ரீதியான பொறிமுறையுடன் தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமான தீர்வு கிடைக்கும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். உள்நாட்டு பொறிமுறையில் அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

இதனை உடனடியாக நிறுத்திவிட்டு சர்வதேசத்திலான பொறிமுறையின் கீழ் அவர்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று ஆராயப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கைகளை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம்.

அப்பொழுது இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது முன்னாள் ஜனாதிபதி அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்தவர் தான் காணாமல் போனவர்களுக்கான முழு காரணமாக இருக்கிறார்.

இன்று அவர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைய முடியாத நிலையில் நாடோடியாக சென்று நாடுவிட்டு நாடு சென்று குறுகியகால தங்கலில் இருக்கின்றார்.எந்த ஒரு நாடும் அவரை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எங்கள் மக்களின் சாபம் அவரை விட்டுவைக்கவில்லை அவரை மட்டுமல்ல ராஜபக்ச குடும்பம் அந்த கட்சியினர் அனைவரையும் விட்டுவைக்கவில்லை.

தமிழ்மக்களின் சாபம் ஏதோ ஒருவகையில் அவர்களை துரத்தி கொண்டே இருக்கிறது. அவர்கள் இந்த நாட்டிலும் நிம்மதியாக வாழ முடியாது. வெளிநாட்டிலும் நிம்மதியாக வாழ முடியாத நிலை இருக்கின்றது.

வினை விதைத்தவன் வினை அறுத்தே தீர வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இன்று உறவுகளை தேடி அலைந்த தாய்மார்கள் இறந்து கொண்டு செல்கின்றார்கள்.

இது அவர்களின் இயற்கை இறப்பல்ல கொலை வீதியில் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் திட்டமிட்ட வகையில் கொலை செய்யப்படுகின்றார்கள். இந்த அரசாங்கம் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் சர்வதேச தலையீடு ஊடாகத்தான் நிரந்தர தீர்வு எட்ட முடியும்" என தெரிவித்துள்ளார்.

இந்தியா செய்திகள்
India News

# சேலம் அரசு மருத்துவமனையில் சுற்றித் திரிந்த போலி மருத்துவர்கள் கைது



வசூல் ராஜா எம்பிபிஎஸ் திரைப்பட பாணியில், சேலம் அரசு மருத்துவமனைக்கு டாக்டர் போல வேடம் அணிந்து வந்த 2 வாலிபர்களை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம், கந்திகுப்பம் பகுதியைச் சேர்ந்த ரியாஸ் மகன் சல்மான் ரியாஸ் (23), சேலம் தளவாய்பட்டி அருகே உள்ள சித்தர்கோவில் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேயன் (23) ஆகிய இருவரும் நண்பர்கள். வசூல் ராஜா எம்பிபிஎஸ் படத்தில் வரும் கமல்போல, இருவரும் சேர்ந்து மருத்துவராக மாறத் திட்டமிட்டு ஸ்டெதஸ்கோப், கோட் எல்லாம் போட்டுக்கொண்டு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கண் சிகிச்சை பிரிவுக்கு நேற்று மதியம் 12.30 மணிக்குச் சென்றுள்ளனர். அப்போது, பணியில் இருந்த செவிலியரிடம் டிஸ்சார்ஜ் நோயாளிகள் பட்டியலைக் கேட்டு தொடர்ந்து பயிற்சி மருத்துவர்களை மிரட்டியதாகக் கூறப்படுகிறது. சந்தேகமடைந்த செவிலியர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து ஆர்எம்ஓ அலுவலகத்தில் ஒப்படைத்தனர். அப்போது, விசாரித்ததில் போலி அடையாள அட்டையை காட்டியதோடு மிரட்டும் தொனியில் பதிலளித்துள்ளனர்.

இதையடுத்து, அவர்கள் இருவரையும் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இருவரையும் போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். அரசு மருத்துவமனையில் மருத்துவர்களுக்கு நோயாளிகள் கொடுக்கும் மரியாதையைப் பார்த்து அதே போன்று அவர்களுக்கும் நோயாளிகள் மரியாதை கொடுப்பதை காண வேண்டும் என்று விபரீத ஆசை ஈடுபட்டு இளைஞர்கள் காவல் துறையினரிடம் சிக்கிய சம்பவம் அப்பகுதி மக்களிடையை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு பகுதியில் பாரிய மக்கள் போராட்டம்

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாரிய அளவிலான மக்கள் போராட்டம்
2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் யுத்த காலப் பகுதிகளில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு மற்றும் பல்வேறு வகைகளிலும் காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு தங்களுடைய போராட்டங்களுக்கு எந்த தரப்புக்களும் உரிய தீர்வுகளை வழங்காத நிலைமையிலே கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கின் உடைய எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டங்களை ஆரம்பித்திருந்தனர் அவ்வாறு தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டமானது இன்று 2000 நாட்களைக் கடந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

உறவுகளை தேடி அலைந்து இவ்வாறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட சுமார் 140 தாய் தந்தையர்கள் உயிரிழந்துள்ள நிலையில் தங்களுக்கான நீதியை வலியுறுத்தி அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது இன்று 2000 நாட்களை கடக்கின்ற நிலையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகிய 30-8-2022 இன்று தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதியான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு நகர்
பகுதியில் பாரிய அளவிலான மக்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்கள் இதன்போது பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்த கசங்கத்தினர், முச்சக்கர வண்டி சங்கத்தினர் மக்கள் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டுள்ளார்கள்.

# அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் துறைசார் நிபுணர்களுடன் கடலரிப்பினை தடுப்பதற்கான கலந்துரையாடல்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பினை தற்காலிகமாக தடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நிரந்தர தீர்வினை நோக்கிய நகர்வின் ஓர் அங்கமாக நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துறைசார் நிபுணர்களுடன் புதன்கிழமை (24) கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த பிரதேச கடலரிப்பானது கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒலுவில் துறைமுக அபிவிருத்தியின் பின்னரான காலப்பகுதியில் படிப்படியாக தென்னந்தோப்புகள், விவசாய காணிகள், மீன்பிடி வாடிகளென காவுகொண்டு இப்பொழுது குடியிருப்பு பகுதிகளை காவுகொள்ள எத்தனித்திருக்கின்றது. இதற்கான தற்காலிக தீர்வுகளை நிந்தவூர் பிரதேச சபை, கரையோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் மற்றும் ஊர் சார்ந்த அமைப்புகள் இனைந்து முன்னெடுத்து வருகின்றது. இத்தோடு நிறுத்தி விடாமல் இக்கடலரிப்பிற்கான நிரந்தர தீர்வுக்கு சாத்தியமான செயற்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளை வழங்குமாறு இத்துறையில் நிபுணத்துவமுள்ள சிரேஷ்ட பொறியிலாளர்களை உள்ளடக்கிய தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆலோசனை மையத்திடம் தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

இதன் போது கலந்து கொண்டிருந்த துறைசார் நிபுணர்கள் இக்கடலரிப்பினை தடுப்பதற்காக குறித்த பிரதேசத்தின் கடல் பரப்பில் நீரோட்ட அளவினை பருவகாலத்திற்கேற்ப கணிப்பீடு செய்தவன் மூலமே நிரந்தர தீர்வு நோக்கி நகர முடியுமெனவும், அதற்காக நிலையான ஆய்வினை தென்கிழக்கு பல்கலைக்கழகம், கடலோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்துடன் இனைந்து இதற்கான ஆய்வினை செய்து நிரந்தர தீர்வினை நோக்கிய திட்டத்தை தயாரிப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டது.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் பணிப்புரையில் பொறியியல் பீட நிபுணர்களால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது நிந்தவூர் பிதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர், ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், நிந்தவூர் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல். றியாஸ் ஆதம், தேசிய அருங்கலைகள் பேரவையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னால் கௌரவ உறுப்பினருமான எஸ்.ஐ.எம். றியாஸ், கரையோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் திரு. துலசி தாசன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ. இல்ஹாம் ஜெசீல், சிரேஷ்ட பொறியியலாளர்களான றிசாத் ஆதம் லெப்பை, கே. விஜயகாந்தன், ஏ.சி. அஸ்லம் சுஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கையில் சீனத் தூதரின் கட்டுரைக்கு கடுமையாக பதிலடி தந்த இந்தியா

இலங்கைக்கான சீனத் தூதர் இலங்கை பத்திரிகை ஒன்றில் அமெரிக்காவையும், பெயர் குறிப்பிடாமல் இந்தியாவையும் விமர்சித்து எழுதிய கட்டுரை ஒன்றுக்கு இந்தியத் தூதரகம் கடும் பதிலடி தந்து ட்வீட் செய்துள்ளது. சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபைத் தலைவர் நான்சி பெலோசி தைவான் வருகை புரிந்ததையும், சீனாவின் யுவான் வாங் 5 ஆய்வுக் கப்பலை இந்தியாவின் எதிர்ப்பை மீறி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட இலங்கை அனுமதித்த செயலையும் ஒப்பிட்டு இலங்கைக்கான சீனத் தூ தர் சே ஜென்ஹாங் இலங்கையில் வெளியாகும் ஸ்ரீலங்கா கார்டியன் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

சீனத் தூதரின் கட்டுரை

“ஒற்றை சீனக் கொள்கையில் இருந்து யுவாங் வாங் 5 வரை” என்று தலைப்பிட்ட அந்த ஆங்கிலக் கட்டுரையில், நான்சி பெலோசி வருகையும், யுவான் வாங் 5 கப்பல் ஹம்பாந்தோட்டை வந்ததும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்றதாகவும், பல்லாயிரம் கி.மீ. தூர இடைவெளியில் நடந்ததாகத் தோன்றினாலும், இந்த இரண்டும் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. குறிப்பாக இரு நாடுகளும் பரஸ்பரம் தங்கள் இறையாண்மையை, பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாத்துக்கொள்ளும் விவகாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று குறிப்பிட்டுள்ளார் ஜென்ஹாங்.

நான்சி பெலோசி வருகையின்போது “இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அரசியல் கட்சிகளும், சமூகக் குழுக்களும் சீனாவுக்கான நீதியைப் பேசியதற்காக நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். 1971ம் ஆண்டு ஐ.நா. சபையில் இலங்கை உள்ளிட்ட 22 நாடுகளால் முன்மொழியப்பட்டு ஐ.நா.வின் 26வது பொதுச் சபைக் கூட்டத்தில் அபரிமிதமான பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட்ட “2758 எண்ணிடப்பட்ட” தீர்மானம் ஒற்றை சீனக் கொள்கையை அதிகாரபூர்வமாக ஏற்கிறது. தைவான் சீனாவின் பிரிக்க முடியாத பகுதி. மக்கள் சீனக்குடியரசுதான் அந்தப் பகுதியை பிரிதநிதித்துவப் படுத்தும் சட்டபூர்வமான அரசாங்கம்” என்று குறிப்பிட்ட சீனத் தூதர், நான்சி பெலோசியின் வருகை ஒற்றை சீனக் கொள்கையை மோசமாக மீறுவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நான்சி பெலோசி, சபாநாயகர் - மக்கள் பிரதிநிதிகள் சபை அத்துடன் இலங்கை 450 ஆண்டுகாலம் மேற்கத்திய காலனியாதிக்கத்தில் இருந்தது என்றும் 17 முறை அண்டை நாட்டின் அத்துமீறலுக்கு உள்ளானதாகவும் குறிப்பிட்ட சீனத் தூதர், 1840 முதல் 1949 வரை அதுபோன்ற அவமானத்துக்கு சீனாவும் உள்ளானதாகவும், அதனால்தான் சர்வதேச அரங்கில் இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். யுவான் வாங் 5 கப்பலின் ஆய்வு நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டது என்றாலும், பாதுகாப்பு கவலைகள் என்ற பெயரில் இலங்கையின் ஹம்பாத்தோட்டை துறைமுகத்தில் அதனை நிறுத்த எதிர்ப்புத் தெரிவித்து வெளிநாட்டுத் தலையீடு இருந்ததாகவும் அவர் இந்தியாவை மறைமுகமாக அந்தக் கட்டுரையில் விமர்சித்திருந்தார்.

மேலும், தூரத்திலும், அருகாமையிலும் உள்ள சில நாடுகள் ஆதாரமற்ற காரணங்களின் அடிப்படையில் இலங்கையை மிரட்டுவதாகவும் அவர் கூறினார். அடுத்த மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் மனித உரிமை பிரச்சனை கிளப்பப்படலாம் என்று கூறிய அவர் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது மனித உரிமையைப் போதிக்கும் நாடுகள் உறுதியான உதவியைத் தருவார்களா அல்லது மனித உரிமை என்ற முகமூடியோடு உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்தால் எரிச்சலடைந்த இந்தியா, கீச்சகத்தில் கடுமையாக எதிர்வினையாற்றியது. இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரபூர்வ கீச்சகக் கணக்கில் இருந்து தொடர் கீச்சகப் பக்கங்கள் மூலம் இந்தியா தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்தது.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இதே கருத்தை ட்வீட் செய்திருந்தது இந்தியத் தூதரகம்.

“சீனத் தூதுவரின் கருத்துகள் குறித்து நாம் கவனஞ்செலுத்தியுள்ளோம். அடிப்படை இராஜதந்திர நெறிமுறைகளை அவர் மீறுவது, ஒரு தனிப்பட்ட பண்பாகவோ அல்லது ஒரு பொதுவான தேசிய அணுகுமுறையின் பிரதிபலிப்பாகவோ இருக்கலாம்,” என்று ட்வீட் செய்த இந்தியத் தூதரகம், மேலும் “இலங்கைக்கு வடக்கே அமைந்திருக்கும் அயல்நாட்டின் மீதான அவரது நோக்கு, அவரது சொந்த நாட்டினுடைய நடத்தையின் பிரதிபலிப்பாக இருக்கலாம். ஆனால், இந்தியா அவ்வாறானதொன்றல்ல என்பதனை நாம் அவருக்கு உறுதிப்படுத்துகின்றோம்.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்குரிய தெனக்கூறப்படும் கப்பலொன்றின் வருகைக்கு பூகோள அரசியல் சூழலை பொருத்துவிக்கும் அவரது நடவடிக்கை ஒரு பாசாங்கான செயலாகும். தற்போது, மறைமுகமானதும் கடன்களை அடிப்படையாகக் கொண்டதுமான நிகழ்ச்சி நிரல்களே, குறிப்பாக சிறிய நாடுகளுக்கு மிகப் பாரிய சவாலாக உள்ளன. அத்துடன், அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ஓர் எச்சரிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கு தற்போது ஆதரவு தேவையாக உள்ளதே தவிர மற்றொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான தேவையற்ற சர்ச்சைகளோ, அழுத்தங்களோ அல்ல” என்று இந்தியா கூறியுள்ளது.

தாய்வான் நீரிணையின் இராணுவமயமாக்கல் மற்றும் சீனாவின் யுவான் வங் 5 கப்பலின் ஹம்பாந்தோட்டை வருகை ஆகியவற்றை தொடர்புபடுத்தி இலங்கைக்கான சீனத்தூதுவர் எழுதிய கட்டுரை குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்முகமாக உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் மேலுள்ள கீசாகப் பதிவுகளை வெளியிட்டுள்ளார் என்ற குறிப்பும் அதில் வெளியிடப்பட்டது.

# தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களை சனிக்கிழமை (27) இரவு தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கையின் தலைமன்னார் கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லைக் கோடு ஊடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் குறித்த 06 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய இழுவை படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேரும் ஞாயிற்றுக்கிழமை (28) காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்தொழிவ் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்த உள்ளனர்.

- மன்னார் நிருபர்



# குளிர்பானம் விற்பனை செய்பவரின் மகள் தொழில் நுட்பபிரிவில் மன்னார் மாவட்டத்தில் முதலிடம்

மன்னார் மாவட்டத்தில் பழைய சதோச கட்டிடத்திற்கு முன் பகுதியில் பல வருடங்களாக தள்ளுவண்டியில் சர்பத்,பழகலவை மற்றும் குளிர்பானம் விற்கும் சிறு வர்த்தகம் செய்யும் ஒரு அன்பரின் மகள் உயிர்முறைமையியல் தொழில் நுட்பபிரிவில் மூன்று A சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தையும் தேசிய ரீதியில் 85 வது இடத்தையும் பெற்றும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மன்னார் உப்புக்குளத்தை சேர்ந்த மொஹமட் பாருக் பாத்திமா வாஸ்மியா மன்.ஃ.அல்ஹஸ்கர் பாடசாலையில் கல்வி கற்றுவந்த நிலையில் 2021 ஆண்டு இடம் பெற்ற உயர்தர பரீட்சையில் உயிர்முறைமையியல் தொழில் நுட்பம்-A சித்தி, மனை பொருளியல்-A சித்தி, தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்-A பெற்று மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஐந்து பிள்ளைகளை கொண்ட மிகவும் குறைந்த வருமானமுடைய குடும்பத்தை சேர்ந்த பாத்திமா வாஸ்மியா வீட்டில் மூன்றாவது பிள்ளையாவர்.

இவரது தந்தை தள்ளுவண்டியில் குளிர்பானம் விற்பனை செய்தும் சர்பத் விற்பனை செய்தும் கிடைக்கின்ற வருமானத்தில் குடும்பத்தினை கொண்டு சென்றதுடன் பிள்ளைகளை சிறப்பாக கல்வியில் முன்னேற்றியிள்ளார்.

பாத்திமா வாஸ்மியாவுடன் சேர்த்து இத் தந்தையின் மூன்று பிள்ளை இதுவரை பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வருகின்றமை குறிப்பிடதக்கது.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கு திறன் பலகை கையாள்வது பற்றிய செயலமர்வு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 14 பாடசாலைகளுக்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (Ratnam Foundation-UK) இணைந்து திறன் பலகைகளை வழங்கியது மட்டுமன்றி அப்பாடசாலை ஆசிரியர்களையும் அக்கல்வி வலய மேற்பார்வை ஆளணியினரையும் பயிற்றுவிக்கும் செயலமர்வு இம்மாதம் 27,28 ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

மட்.ீ.மமே.ீ. முனைக்காடு விவேகானந்த தேசிய பாடசாலை மற்றும் ம.ீ.மமே.ீ.முதலிக்குடா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இருபிரிவுகளாக நடைபெற்ற இச் செயலமர்வில் 48 பேர்வரையில் கலந்து கொண்டிருந்தனர்.



கல்வி அமைச்சின் ஈதக்சலாவ கல்வி பிரிவு மற்றும் வடமராட்சி கணனி வள நிலைய வளவாளர்களினால் நடாத்தப்பட்ட இச்செயலமர்வு ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பங்குபற்றுநரும் செயற்பட்டு, அனுபவத்தை பெற்றுக்கொண்ட வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், வடக்கு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் முந்நாள் பிரதிமாகாணக் கல்வி செயலாளரும், சிரேஷ்ட உதவிக்கல்வி செயலாளருமாகிய ஓய்வுபெற்ற திரு. திசவீரசிங்கம் பொன்னம்பலம், IMHO-USA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளரும் ஓய்வுபெற்ற வலயககல்வி பணிப்பாளருமாகிய திரு. சு. கிருஷ்ணகுமார் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இச்செயலமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கான விரலிகளும் பாடசாலைக்குரிய பெயர் பலகைகளும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

# இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்கிறார் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ்

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், இந்தியக் கடல் எல்லைக்குட்பட்ட, வழக்கமாக மீன்பிடிக்கும் பகுதிகளில், தங்களின் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் கடந்த சில மாதங்களாக தொடர் கதையாக இருந்து வருவது வேதனை அளிக்கும் செயலாகும்.

“இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், இரு நாட்டுக் கடற்கரை பகுதிகளிலும் சிக்கல் தீர்க்கும் மையங்களை (Crisis Management Centres) உருவாக்க மத்திய அரசை தி.மு.க. வற்புறுத்தும் என்று தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்து 15 மாதங்கள் முடிந்த நிலையில், இதற்கான முயற்சியை எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பது தொடர்பாக நான் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதங்களை எழுதியுள்ளேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவ்வப்போது கடிதங்களை எழுதுகிறார். இருப்பினும், தமிழக மீனவர்களை தொடர்ந்து சிறைபிடிப்பதை இலங்கை கடற்படை வாடிக்கையாக கொண்டுள்ளது. எனவே, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதை தடுக்கவும். அவர்களுடைய படகுகள் பறிமுதல் செய்யப்படுவதை நிறுத்தவும், அவர்கள் எவ்வித அச்சமுமின்றி இந்திய எல்லைக்குட்பட்ட கடல் பகுதியில் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இரு நாட்டு கடற்கரை பகுதிகளிலும் சிக்கல் தீர்க்கும் மையங்களை உருவாக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.





# சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 16 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 16 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 6.995 கிலோ கிராம் எடையுள்ள 60 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அதன் பெறுமதி 157 மில்லியன் ரூபா எனவும் விமான நிலைய சுங்கப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் கட்டுநாயக்க விமான நிலைய Duty Free கடையில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட நபர் ஜா எல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் 24 கேரட் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் ஸ்ரீலேகா பேரின்ப குமாரின் "கோவர்த்தனம்" நாவல் வெளியீடு

மன்னார் மாவட்டத்தை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலேகா பேரின்ப குமார் அவர்களின் "கோவர்த்தனம்" நாவல் நானாட்டான் சிவராசா இந்து வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டது.

மன்னார் புனித தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக அருட்திரு.தமிழ் நேசன் அடிகளார், நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்த குமார், சிறப்பு விருந்தினராக நானாட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜெகநாதன், கௌரவ விருந்தினர்களாக சிவராசா இந்து வித்தியாலய அதிபர் அமலதாசன், எஸ். ஆசைப்பிள்ளை கலந்து கொண்டார்கள்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட நூலாசிரியர் ஸ்ரீலேகா பேரின்பகுமார் அவர்கள் நீண்ட காலம் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணிபுரிந்தவர்.

மன்னார் பெருநிலப் பரப்புப் பிரதேசங்களில் விவசாயத்திற்கு இணையாக கால்நடைகள் வளர்க்கப் படுவதுண்டு. அவ்வாறு வளர்க்கப்படும் கால்நடைகளை மேய்ச்சலுக்காக ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு சென்று பாதுகாப்பதில் உள்ள பிரச்சனைகள், இதனால் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை எடுத்துக் கூறும் வகையில் இந்த நாவல் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

ஆசிரியை ஸ்ரீலேகா பேரின்ப குமார் அவர்களின் எட்டாவது இலக்கியப் படைப்பு "கோவர்த்தனம்" நாவல் என்பது குறிப்பிடத்தக்கது.








- மன்னார் நிருபர்




# தடை நீக்கம் ஒரு பொறியா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சில மற்றும் நபர்கள் மீதான தடைகளை அரசாங்கம் நீக்கியிருப்பது தொடர்பாக நான் எழுதிய கட்டுரைக்கு கனடாவில் உள்ள எனது நண்பர் ஒருவர் பதில்வினையாற்றி இருந்தார். "தாயகத்தில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாத தமிழர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அமைப்புகளையும் நபர்களையும் எப்படி ஒன்றிணைப்பது?" என்று அவர் கேட்டிருந்தார்.

யதார்த்தமான கேள்வி. தாயகத்தில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள், மிகச் சிறிய சனத்தொகையின் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் மூன்று கட்சிகளை ஒன்றாக்க முடியவில்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழ் பரப்பு எனப்படுவது உலகம் முழுவதும் பரந்து விரிந்து சிதறிக்கிடக்கிறது. அது வெவ்வேறு நாடுகளில் ஒவ்வொரு மொழிகளை பேசுகிறது. வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு பொருளாதாரக் கட்டமைப்புகளில் வெவ்வேறு நிலையான பொருளாதார நலன்களோடு காணப்படுகிறது. தாயகத்தை நோக்கிய பிரிவேக்கம் என்ற ஒன்றைத்தவிர வேறு எதுவும் அந்த அமைப்புகளுக்கு இடையில் இப்பொழுது பொதுவானதாக இல்லை. கடந்த 13 ஆண்டுகளாக ஐக்கியப்பட முடியாத, ஐக்கியப்படுத்த யாருமில்லாத ஒரு புலம்பெயர் சமூகமாக தமிழ் சமூகம் காணப்படுகிறது.

கடந்த 13 ஆண்டுகளில் ஐநாவை நோக்கியும் உலகப்பொது மன்றங்களை நோக்கியும் நீதிக்காக அயராது உழைத்த ஒரு சமூகமாகவும் அது காணப்படுகிறது. இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக நெருக்கடியை கொடுத்த ஒரு சமூகமாகவும் காணப்படுகிறது. தாயகத்தில் இருக்கும் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தனிநபர்களுக்கும் நிதியை அள்ளி வழங்கிய காசு காய்க்கும் மரமாகவும் அது காணப்படுகிறது. உலகின் மிகவும் கவர்ச்சியான செயல்திறன் மிக்க ஒரு புலம்பெயர் சமூகமாக அது தன்னை வெளிக்காட்டியிருக்கிறது. ஆனாலும் மிகவும் சிதறிப்போன, கூட்டுச் செயல்பாடு இல்லாத ஒரு புலம்பெயர் சமூகமாகவும் அது தன்னை நிரூபித்திருக்கிறது என்பதுதான் இங்கு முக்கியமாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

தாயகத்தில் இயங்கும் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் நிதி உதவி புரியும் அதேநேரம் அந்த நிதி உதவிதான் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் பிரித்து வைத்திருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேலும் அந்த நிதி உதவிகளால் தாயகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. அல்லது மறுவளமாகச் சொன்னால் புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் எவ்வளவுதான் காசு கொடுத்தாலும் அந்த காசினால் தாயகத்தில் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை.இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் அவ்வாறு ஐக்கியம் ஏற்படாமைக்கு மேற்படி தனித்தனியான தூர இயக்கி - ரிமோட் கண்ட்ரோல் - உதவியும் ஒரு காரணம் எனலாம். இவ்வாறான கூட்டு செயற்பாடற்ற ஒரு புலம்பெயர்ந்த சமூகத்தை நோக்கி இலங்கை அரசாங்கம் கொழுக்கிகளை வீசியிருக்கிறது என்பதே உண்மை. தங்களுக்கிடையே ஒற்றுமைப்படாத ஒரு சமூகம் இந்த கொழுக்கிகளில் சிக்கி தனித்தனியாக உதிரிகளாக தன்னை நோக்கி வரும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது.

அவ்வாறு சிந்திக்க தேவையான கொழுத்த அனுபவம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. கடந்த 2015ல் ஆட்சி மாற்றத்தின் பின் அவர் அதைச் செய்தார். அப்பொழுதும் இதே அமைப்புகள் மீது தடைகள் நீக்கப்பட்டன. நபர்கள் மீதும் தடைகள் நீக்கப்பட்டன. இப்பொழுது இருப்பதைப் போல பொருளாதார நெருக்கடி என்ற விவகாரம் அப்பொழுது இருக்கவில்லை. ஆனால் ஜெனிவாவை கையாள்வது, புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் பலத்தை உடைப்பது போன்ற நிகழ்ச்சி நிரல்கள் இருந்தன. அந்த நிகழ்ச்சி நிரலை முன்வைத்து குறிப்பிடத்தக்களவு தூரத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்நகரக் கூடியதாகவும் இருந்தது.

குறிப்பாக ஐநாவில் நிலைமாறு கால நீதியை நோக்கி புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியை ஈர்த்து எடுப்பதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருந்தது. தாயகத்தில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டமைப்பும் அப்பொழுது அந்த நிகழ்ச்சி நிரலிற்கு உட்பட்டு இயங்கியது. கூட்டமைப்பு நிலை மாறுகால நீதியை ஆதரித்தது. இதனால் கூட்டமைப்பு மற்றும் தடை நீக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் போன்றன இணைந்து நிலைமாறு காலை நீதி நிகழ்ச்சி நிரலை பலப்படுத்தின. இது விடயத்தில் தடைநீக்கப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகள் பெருமளவுக்கு தாம் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் நிலைமாறு கால நீதிக்கான நிகழ்ச்சி நிரலை அதிகபட்சம் முன்னெடுத்தன. அக்காலகட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் ஜெனிவாவில் நிலைமாறு கால நீதியா? அல்லது பரிகார ரீதியா? என்று தங்களுக்கிடையே பிரிந்து நிற்கும் ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டது.

அல்லது புலம்பெயர்ந்த தமிழ் சமூகங்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் ஐநாவில் முன்னெடுத்த தமிழர் தொடர்பான நிகழ்ச்சி நிரலை பெருமளவுக்கு பிரதிபலித்த தமிழ் அமைப்புகள், அல்லது பிரதிபலிக்க மறுத்த தமிழ் அமைப்புகள் என்று புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மத்தியில் பல்வேறு நிலைபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

இப்பொழுது மறுபடியும் ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அவர் தன்னுடைய நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சி காலத்தில் முன்னெடுத்த அதே நிகழ்ச்சி நிகழ்ச்சிநிரலை அதாவது தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளின் உதவியோடு ஜெனிவாவைக் கையாள்வது என்ற நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கக்கூடும். அதைவிட மேலதிகமாக நாட்டில் இப்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு புலம்பெயர் தமிழ் முதலீடுகள் என்ற நோக்கு நிலையில் இருந்தும் செயல்பட முடியும்.

இப்பொழுது வந்திருக்கும் தடைநீக்கம் ரணில் விக்ரமசிங்கவின் முன்னெடுப்பு மட்டுமல்ல. அது ஏற்கனவே கோதாபயவின் காலத்தில் தொடங்கப்பட்டது. ரணில் அதை முடித்து வைத்திருக்கிறார். கோத்தாவும் ரணிலை போல முன் கண்ட இரண்டு நிகழ்ச்சி நிரல்களை மனதில் வைத்திருந்தார். ஒன்று ஜெனிவாவை கையாள்வது, இரண்டு பொருளாதார நெருக்கடியை கையாள்வது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஜெனிவாவைக் கையாள்வது என்பது பின்வரும் அர்த்தங்களை கொண்டிருக்கிறது. முதலாவது புலம்பெயர் தமிழ் சமூகத்தை பிரித்துக் கையாள்வது. இரண்டாவது புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அனைத்துலக அரங்கில் முன்னெடுத்து வரும் நீதிக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்துவது.

தடை நீக்கப்பட்டால் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டிற்குள் வந்து போகும் நிலைமை திறக்கப்படும் போது தாயக கள யதார்த்தத்தோடு அவர்கள் நெருங்கி உறவாடும் ஒரு நிலைமை தோன்றும். இவ்வாறு தாயகத்துக்கு வந்து போகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் பொழுது, அந்த வாய்ப்புகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு எப்படி அவற்றை பாதுகாப்பது என்றுதான் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் சிந்திப்பார்கள். தாயகத்துக்கு வந்து போகும் நிலைமைகளை பாதுகாப்பது என்பது அதன் தக்கபூர்வ விளைவாக தாயகத்துக்கு வெளியே அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் தீவிரத்தை குறைப்பதுதான். அரசாங்கத்துக்கு எதிராக நீதியைக் கோரும் போராட்டத்தின் தீவிரத்தை குறைப்பதுதான்.

எனவே தடை நீக்கத்தின்மூலம் வெளியரங்கில் தனக்கு எதிராக செயல்படக்கூடிய தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்களின் தீவிரத்தை அரசாங்கம் குறைக்க முடியும். இது கடந்த நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக்காலத்திலும் அவதானிக்கப்பட்டது.

ஏன் கடந்த சில ஆண்டுகளாகவும் அதைக் காண முடிகிறது. குறிப்பாக கடந்த ஆண்டு ஜெனிவாவில் ஒப்பிட்டுளவில் குறைந்தளவு பக்க நிகழ்வுகளே இடம்பெற்றதாக ஒரு செயற்பாட்டாளர் தெரிவித்தார். அதற்குக் காரணம் பக்க நிகழ்வுகளுக்கு நிதி உதவி புரியும் ஒரு தமிழ் பெரு வணிக நிறுவனம் அந்த நிதி உதவியை குறைத்தமைதான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஏனெனில் அந்த பெரு வணிக நிறுவனம் தாயகத்தில் முதலீடுகளை செய்ய தொடங்கிவிட்டது. குறிப்பாக தென்னிலங்கையில் வங்குரோத்தான ஒரு சிங்கள கொம்பனியை அது விலைக்கு வாங்கியிருக்கிறது. தாயகத்தில் தனது முதலீடுகளை பத்திரமாக முன்னெடுப்பதற்கு அந்த நிறுவனம் அரசாங்கத்துக்கு எதிரான அதன் போக்கில் தளர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதன் விளைவுதான் கடந்த ஆண்டு பக்க நிகழ்வுகளில் அந்த நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பு குறைவாக காணப்பட்டமையும் என்று மேற்படி செயற்பாட்டாளர் தெரிவித்தார்.

இதைத்தான் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. தடை நீக்கப்பட்ட அமைப்புகளும் நபர்களும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் தீவிரம் குறையும். இது முதலாவது இலக்கு. இரண்டாவது இலக்கு முதலீடு. கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய பொழுது ரணில் விக்கிரமசிங்க "புலம்பெயர் நிதியம்" ஒன்றை உருவாக்குவது தொடர்பாக யோசனையை முன் வைத்துள்ளார். வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பு மையமாக தொழிற்படுகின்ற வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகமொன்றினை ஸ்தாபிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

அதாவது புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் என்ற பொதுவான ஒரு பதத்தினை அவர் பயன்படுத்துகின்றார். தமிழ் முதலீடு என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும்பொழுது அதன் இனரீதியான பரிமாணத்தை அகற்றிவிட்டு வெறும் முதலீடாகச் செய்வது சரியா? அல்லது ஒரு தேசமாக சிந்தித்து தாயகத்தில் தமிழ் தேசத்தை கட்டி எழுப்புவது என்ற அடிப்படையில் முதலீடு செய்வது சரியா?

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் உதிரிகளாக வந்து தாயகத்தில் முதலீடு செய்தால் என்ன நடக்கும்? அது வழமையான திறந்த சந்தைப் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் நிகழும் ஒரு முதலீடு என்ற பொருளாதார பரிமாணத்தைத்தான் அதிகமாக கொண்டிருக்கும். மாறாக அதற்கு தாயகம் நோக்கிய தமிழ் முதலீடு என்ற இன ரீதியிலான பரிமாணமும் பண்பாட்டு ரீதியிலான பரிமாணமும் அல்லது தமிழ் தேசிய நோக்கு நிலையிலான பரிமாணமும் குறைவாகவே இருக்கும்.

புலம்பெயர்ந்த தமிழ் முதலீடுகளுக்கு எப்பொழுது தமிழ்த் தேசிய பரிமாணம் அதிகரிக்கிறது என்றால் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் ஒரு தேசமாக சிந்தித்து முடிவெடுக்கும் போதுதான். ஒரு தேசமாக சிந்திப்பது என்றால் என்ன? ஒரு மிகப்பெரிய மக்கள் திரளாக சிந்திப்பதுதான். தாயகத்துக்கு வெளியே அவ்வாறு சிந்திப்பது எப்படி தாயகத்தில் தமிழ் மக்களை ஒரு பெரிய தேசமாகக் கட்டி எழுப்புவது என்ற அடிப்படையில் முதலிடுவது என்று சிந்திப்பதுதான். அதாவது தாயகத்தில் தேச நிர்மாணத்தில் ஒரு பகுதியாக முதலீடு திட்டமிடப்பட வேண்டும். மாறாக தனித்தனி வள்ளல்களின் உதவிகளோ அல்லது தனித்தனி முதலாளிகளின் உதிரியான முதலீடுகளோ தாயகத்தை கட்டி எழுப்புவது என்ற சமூகப் பொருளாதார அரசியல் பரிமாணத்தை கொண்டிருக்க போவதில்லை.

எனவே இப்பொழுது இக்கட்டுரை தொடங்கிய இடத்துக்கே வரலாம். எனது நண்பர் கேட்டது போல புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் முதலீட்டை ஒரு கூட்டுச் செயற்பாடாக செய்வதற்கான வாய்ப்புகள் அநேகமாக இல்லை. புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் ஒரு தேசமாக சிந்தித்து முதலீடு செய்யப் போவதில்லை என்ற எதிர்பார்ப்பில்தான் அரசாங்கம் இந்தக் கொழுக்கியை வீசியிருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் உதிரிகளாக நாட்டுக்குள் முதலீடு செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதாவது ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கி ஒரு பொறியை வைத்திருக்கிறார் என்று பொருள். அந்தப் பொறிக்குள் தமிழ் நிதி உதிரியாக வந்து சிக்குமா?

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எப்போது நீதி கிடைக்கும்? நீதி தாமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் நீதி மறுக்கப்படுகின்றது!

***கட்டுரையாளர் :— ஜோசப் நயன்***





காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகப்பெரியதொரு மனித உரிமை மீறல் ஆகும் உலகில் பல நாடுகளில் காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன்றும் சர்வசாதரணமாக இடம் பெற்று வருகின்ற விடயமாகும்.

உலக நாடுகளில் கிளரச்சியாளர் குழுக்களாலும் இராணுவத்தாலும் அரசியல் சார்ந்த காரணங்களாலும் தனி மனிதனோ அல்லது குழுக்களோ மக்கள் தொகுதியோ காணாமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் இன்றும் அரங்கேரித்தான் வருகின்றன.

அரசியல், வன்முறை,போர்,போன்ற காரணிகளால் உலகம் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய தகவலுக்காக காத்துக்கிடக்கும் அவர்களின் குடும்பங்களின் துயரம் குறித்த கவனத்தை சமூக ரீதியாக ஈர்ப்பதற்கு ஆகஸ்ட் 30 ஆம் திகதியை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாக ஐக்கிய நாடுகாள் சபை கடந்த 2011.08.30 திகதி அன்று அறிவித்தது

தமிழர் தாயக பகுதியை பொறுத்தவரையில் காணாமல் ஆக்கப்படுதலின் உள்ளார்ந்த வழியை அதிகம் அனுபவித்த தமிழ் தாய்மார்கள் பலர் யுத்தத்தின் காரணமாகவும் அதே நேரம் சரணடைந்தும் இராறுவத்தின் கைகளில் பிள்ளைகளை கொடுத்து அவர்கள் மீண்டும் கிடைக்க மாட்டார்களா? என்ற ஏக்கத்துடன் புகைப்படங்களை ஏந்தியவாறு வீதிகளில் போராட்டங்களுடனும் எதிர்புக்களுடனும் தங்கள் வாழ்க்கையின் இறுதி நாட்களை எண்ணி வருகின்றனர்.

இலங்கையின் போர்கால வரலாற்றில் நீண்ட கால யுக்தியாக இந்த வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இடம் பெற்றது இலங்கையின் அரச படைகளால் மட்டுமல்லாது பல்வேறு ஆயுத குழுக்களாலும் பல்வேறு போராட்ட தரப்புக்களாலும் இந்த காணமல் ஆக்கப்படுதல் தொடர்பான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடதக்கதொன்றாகும்

இவ்வாறான காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் பல தசாப்தங்களாக இடம்பெற்ற மனித உரிமை மீறலாக கருதப்பட்டு வந்தாலும் இன்றும் பல்வேறு கடத்தல் சம்பவங்கள் பதிவாகின்றமை இலங்கையில் தனி மனித சுதந்திரம் சமூகத்தில் தொடர்ந்து மறுக்கப்படுகிறது என்பதை எடுத்து கூறுகின்றது

இறுதி யுத்தத்திற்கு முன்பும் சரி பின்னரும் சரி வெள்ளை வேண் கடத்தல்,இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், வயது வித்தியாசம் இன்றி இலங்கை அரச தரப்புபடைகளால் கைது செய்யபட்டவர்கள்,நலன்புரி முகாம்களுக்கு சென்றவர்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியல் நீண்டு செல்வதை அவதானிக்க முடியும்

இலங்கையின் போர்ச்சூழல் ஆரம்பித்த கால பகுதியில் இருந்து மனித கடத்தல் அல்லது வலிந்து காணாமல் போகச்செய்தல் எனும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்பதற்கு சான்றாக இன்றும் உறவுகளை தொலைத்துவிட்டு வீதிகளிலும் வீதியோரங்களிலும் கொட்டகைகள் அமைத்து போராடும் வயோதிப தாய்மார்களே சாட்சியம்

தங்கள் பிள்ளைகளுக்காகவும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் கண்ணீரோடு தெருத்தெருவாகவும்,பல தூதரகங்களுக்கு முன்பாகவும் தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிவதற்காக மழையிலும் வெயிலும் சமூகத்தின் ஏளனப் பார்வைக்கு மத்தியிலும் உன்னதமானதும் உயிரோட்டமானதொரு போராட்டம் வடக்கு கிழக்கு தமிழர்வாழுகின்ற பகுதிகளில் மக்கள் மயப்படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது

இவ்வாறான பின்னனியில் இந்த தாய்மார்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் இலங்கை அரசாங்கம் இதுவரை நியாயமான தீர்வையோ அல்லது அந்த தீர்வை நோக்கி கொண்டு செல்வதற்கான ஒரு பொறிமுறையினையோ இதுவரை முன்வைக்கவில்லை இதன் காரணமாகவே இங்கே பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த கோசமும் நியாயமான சர்வதேச விசாரணையினை நோக்கிதாக காணப்படுகின்றது

இலங்கையில் நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான போர்குற்றங்கள் சர்வதேச ரீதியில் விசாரிக்கப்பட்டால் மாத்திரமே தங்களுக்கு நீதியான பதில் கிடைக்கும் என பல சமூக செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்ட தாய்மார்களும் வைக்கும் கோரிக்கைகும் அங்கலாய்ப்புக்கும் பூகோள அரசியல் இதுவரை இடம்தரவில்லை என்பதே உண்மை .

நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த கடந்த அரசாங்கத்தில் கூட சர்வதேசத்தின் அழுத்தங்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட காணாமல் போனோருக்கான அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம் என்பதுடன் இந்த அலுவலகத்தால் எந்தவிதமான நன்மைகளும் அல்லது நீதியான விசாரனைகளுக்கான எந்த முன்னெடுப்புக்களும் இதுவரை எட்டப்படவில்லை என்பதே பல தாய்மார்களின் குற்றச்சாட்டாகும்

பொதுவாக இறந்துபோனவர்களுக்கு ஒரு நினைவேந்தல் செய்வதன் மூலம் உளவியல் ரீதியாக ஆறுதல் கிடைக்கும் ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாத நிலையிலும்! அப்பாவின் முகங்களை மறந்த சின்னஞ்சிறார்களின் ஏக்கத்திலும்! கடைசி காலத்தில் செய்யவேண்டி கடமைகளை கூட செய்வதற்கு பிள்ளைகளின்றி வாழும் பெற்றோர்களின் கண்ணீரின் வலிகளிலும் உள ரீதியான தாக்கம் எப்போதுமே நீண்டு கொண்டிருக்கும். *(தொடர்ச்சி 13ம் பக்கம்)*




FM 88.9 HD3
தாளம்
FM 88.9 HD3
உங்கள் வாகனங்களில் கேளுங்கள் தாளம்,
குதூகலம் ஏராளம்
GTA
தாண்டியும்
துல்லியமாக
ஒலிக்கும்
24 மணி நேர
தமிழ் வானொலி
88.9 HD3
thaalamfmhd
416-441-4100
Thaalam FM
www.thaalam.fm

# Ontario's Premier Ford Met with Prime Minister Trudeau at Queen's Park on Tuesday and Discussed the Current Pressures on the Health Care System, and Other Shared Priorities.

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் – கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் குயின்ஸ் பார்க் பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தனர்

ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் கடந்த செவ்வாய்கிழமையன்று. குயின்ஸ் பார்க் என்று அழைக்கப்பெறும் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்ற வளாகத்தில் கனடாவின் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ அவர்களைச் சந்தித்து, சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பில் தற்போதைய அழுத்தங்கள் மற்றும் வீட்டுவசதி, தொழிலாளர் மற்றும் அவசியமான தொழிற்துறைகளில் உள்ள வேலையாட்கள் பற்றாக்குறை, குடியேற்றம் மற்றும் பிற விடயங்கள் தொடர்பாக நீண்ட நேரம் உரையாடினார்கள்.

ஒன்றாறியோ மாகாணத்திலும் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள சுகாதாரப் பாதுகாப்பின் தற்போதைய நிலை மற்றும் தொற்றுநோயால் உயர்த்தப்பட்ட சுகாதார அமைப்புகளின் அழுத்தங்கள் குறித்து ஒன்றாரியோ முதுல்வர் டக் போர்ட் மற்றும் கனடியப் பிரதமரும் கலந்துரையாடினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல தசாப்தங்களாக ஒன்றாரியோ மாகாணத்தில தோற்றியுள்ள பிரச்சனைகளுக்கு புதுமையான தீர்வுகளை செயல்படுத்த, அரசாங்கங்களாகவும், அதே போல் முன் வரிசையில் உள்ள எங்கள் கூட்டாளர்களுடன் நெருக்கமாகவும் தொடர்ந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

அனைத்து கனேடியர்களுக்கும் உயர்தர சுகாதார சேவைகளின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் அணுகலை உறுதி செய்வதில் மத்திய அரசு மாகாணங்களுடன் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் முதல்வர் டக்போர்ட் அவர்களிடம் வேண்டுகின்றேன் என்றார்.

10 ஆண்டுகளில் 1.5 மில்லியன் வீடுகளை கட்டுவதில் ஒன்றாறியோவின் முன்னேற்றம் உட்பட, வீட்டு நெருக்கடியைச் சமாளிப்பதற்கான தீர்வுகள் குறித்து தலைவர்கள் விவாதித்தனர். சமீபத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில், வீட்டு கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்கான கருவிகளை நகராட்சிகளுக்கு வழங்குதல் மற்றும் உபரி மாகாண நிலங்களை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். மேலும் வீடுகளை விரைவாகக் கட்டுவதற்கு தங்களால் இயன்றதைச் செய்ய அரசாங்கத்தின் மூன்று நிலைகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

ஒன்ராறியோ மாகாணத்திற்கு அதிக பொருளாதார மற்றும் திறமையான குடியேற்றவாசிகளை வரவேற்க விரும்புவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர், மேலும் குடியேற்றத்திற்கான தடைகளை நீக்குவது ஒன்ராறியோவில் சுகாதாரப் பாதுகாப்புத் துறை உட்பட தற்போதைய தொழிலாளர் மற்றும் பணியாளர் பற்றாக்குறைக்கு கணிசமான அளவு உதவும் என்று பிரதமர் கூறினார்.

அமெரிக்காவின் பணவீக்கக் குறைப்புச் சட்டத்தின் சமீபத்திய நிறைவேற்றம் மற்றும் ஒன்ராறியோவில் மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரிகள் உற்பத்தியின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி குறித்தும் பிரதமரும் பிரதம மந்திரியும் விவாதித்தனர். ஒன்றாரியோ மாகாணம் நம்பமுடியாத அளவிற்கு முன்னேறி, பொறுப்புடன் பெறப்பட்ட முக்கியமான பொருட்களின் நம்பகமான உலகளாவிய விநியோகஸ்தராக மாறுகிறது. மற்றும் மாகாணத்தில் மின்சார வாகனங்களின் விநியோகச் சங்கிலியை உருவாக்குகிறது. இரு தலைவர்களும் முக்கியமான கனிமங்களைப் பற்றி தொடர்ந்து விவாதிக்க ஒப்புக்கொண்டனர் மற்றும் ஒன்ராறியோவின் வாகன உற்பத்தித் துறையை ஆதரிப்பதற்கான வழிகளில் ஒத்துழைக்க மற்றும் அதை வெற்றிபெறச் செய்யும் கடின உழைப்பாளி ஆண்களும் பெண்களும் ஒப்புக்கொண்டனர்.

ஒன்ராறியோ மக்களுக்கு வழங்குவதில் தொடர்ந்து இணைந்து பணியாற்ற கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மற்றும் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.



---

Premier Doug Ford met with Prime Minister Justin Trudeau at Queen's Park on Tuesday to discuss the current pressures on the health care system, as well as housing, labour market shortages, immigration, and other shared priorities.

The premier and prime minister spoke about the current state of health care in Ontario and across the country and the strains on health systems that have been heightened by the pandemic. They agreed on the importance of continuing to work closely as governments, as well as with our partners on the front line, to implement innovative solutions to problems that have been decades in the making.

The Premier raised the need for the federal government to work together with provinces on ensuring the long-term sustainability and accessibility of high-quality health care services for all Canadians and asked for a First Minister's meeting to be held as soon as possible.

The leaders discussed solutions to tackle the housing crisis, including Ontario's progress on building 1.5 million homes over 10 years. Recent actions taken include giving municipalities the tools to speed up housing construction and leveraging surplus provincial lands. They agreed that all three levels of government must work together to do what they can to get more homes built faster.



The two leaders also discussed Ontario's desire to welcome more economic and skilled immigrants to the province and the premier raised that removing barriers to immigration would significantly help Ontario respond to current labour and workforce shortages, including in the health care sector.

The premier and prime minster also discussed the recent passage of the United States' Inflation Reduction Act, and the economic growth resulting from the production of electric vehicles (EV) and batteries in Ontario. Ontario is making incredible strides toward becoming a reliable global supplier of responsibly sourced critical materials and building an end-to-end EV supply chain in the province. Both leaders agreed to continue to discuss critical minerals and collaborate on ways to support Ontario's auto-manufacturing sector and the hardworking men and women who make it the success that it is.

Both leaders agreed to continue working together on delivering for the people of Ontario.

- LJI Journalists Ganesh and Arjune

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எப்போது நீதி கிடைக்கும்? நீதி தாமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் நீதி மறுக்கப்படுகின்றது!

(11ம் பக்கத் தொடர்ச்சி)

2009 ம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின்னர் இருந்து தற்போதுவரை 115க்கும் மேற்பட்ட தாய்மார் தங்களுடைய பிள்ளைகளை தேடிய நியாயயமான தேடலில் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டு மரணித்துள்ளார்கள்

இவர்களது மரணம் சாதாரணமான ஒன்றல்ல வலிகளை சுமந்த சாட்சியங்கள் இந்த இறப்புக்களின் மூலம் அழிக்கப்பட்டுக்கொண்டு வருகின்றது இவ்வாறான பின்னனியில் தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமானது என்ற முடிவுக்கே நியாயத்தை கோரும் மக்கள் வரவேண்டியுள்ளது

இன்று சமூகத்தில் உள்ள பொருளாதார நெருக்கடிக்குள் மிகவும் பாதிக்கப்படும் ஒருதரப்பாக இந்த காணமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இருக்கின்றன. குறிப்பாக கணவர் காணாமலாக்கப்பட்டு பிள்ளைகளுடன் வாழும் இளம் தாய்மார்களின் இன்றை நிலை பல சோகங்களை உள்ளடக்கியது

பெண்தலைமைத்துவ குடும்பங்களாக அந்த பெண்கள் சொல்லமுடியாத துயரங்களை சுமந்து கொண்டு வாழ்கை போரட்டத்தையும் நடாத்தி தங்களின் உறவுகளுக்கான போராட்டங்களிலும் தொடர்ந்து போராடி வருகின்றனர்

தன் பிள்ளையை பறிகொடுத்த நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தங்கள் முதுமை நிலையையும் மறந்து மரணத்திற்கு முன்னாவது என் பிள்ளையை பார்த்து விடமாட்டோமா என்ற ஏக்கத்துடன் பல ஆயிரம் நாட்கள் கடந்தும் வீதிகளில் இறங்கி போராடி வருகின்ற நிலையை கண்கூடாக பார்க்கமுடிகிறது




யுத்ததின் போது காணாமல் ஆக்கப்பட்ட தனது தந்தைக்காக பல குழந்தைகள் பள்ளி புத்தகங்களை சுமக்க வேண்டிய கைகளில் போராட்ட பதாதைகளை சுமந்து தந்தையை தேடி போராடி வருகின்றார்கள்

இந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்றாலோ அல்லது இவர்களுக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்றாலோ பொதுமக்களும் இந்த போராட்டங்களில் பங்குதாரராக மாறவேண்டும் அன்று அவர்களுக்கு நடந்தது மற்றவர்களுக்கு நடக்காது என ஏனைய பொது மக்கள் ஒதுங்கி இருந்து விட முடியாது இந்த காணாமல் ஆக்கப்படும் சந்தர்பங்கள் தனி குடும்பங்களுக்கு நேர்ந்த மனித உரிமை மீறல்கள் அல்ல மாறாக இது யுத்தத்தின் ஒரு வகை தந்திரோபாய செயற்பாடாகவே கருதுவேண்டும் நேற்று அவர்களுக்கு நாளை நமக்காகவும் இருக்கலாம்.

எனவே நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தாய்மார்கள் செய்யும் அறவழி போராட்டத்திற்கு சர்வதேசத்தின் உதவியுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

அத்துடன் இவர்களுக்கான நீதி பொறிமுறை மற்றும் பொறுப்புக்கூறல் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் அதுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்திற்கு முடிவு எப்போதும் இல்லை என்பதே நிதர்சனம்.

# மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திறன் வகுப்பறையில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்



ஐக்கிய இராட்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் மற்றும் இராமலிங்கம் பவுண்டேசன் நிதிப்பங்களிப்பில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை ஒன்றில் ஆரம்ப பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இம்மாதம் 31ஆம் திகதி குதூகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கல்லூரியின் அதிபர் திருமதி. சுனித்ரா சூரியராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்ப கல்வி உதவிக்கல்விப்பணிபாபாளர் திரு. முரளிதரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக இரட்ணம் பவுண்டேசன் சார்பில் ஓய்வுபெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து விழாவை சிறப்புற வைத்தனர்.

ஏற்கெனவே பயிற்சி வழங்கப்பட ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களை நிகழ்த்திய பாங்கு நிகழ்வில் பங்கேற்றவர்களை ஈர்த்ததை காணமுடிந்தது. ஆசிரியர் ஒருவரும் திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இந்நிகழ்வில் செய்து காட்டியமை குறிப்பிடத்தக்கது.

உதவியளித்திருந்த அமைப்புக்களுக்கு அதிபர் உட்பட விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்படுத்தும் ஆசிரியர்களுக்கான உபாயங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்கள் தமது ஆராய்வூக்கம் மற்றும் ஆக்குதிறன் முயற்சிகளுக்காக எவ்வாறு திறன் பலகையை பயன் படுத்தி சிறப்பாக துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் விருந்தினர்களால் மாணவர்களால் வழங்கப்பட்டு ஆசிரியர் ஒருவரது நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.





# புலிகளால் புதைத்த எண்ணை தாங்கி மீட்பு

- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு *10* ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளால் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள பாரிய எரிபொருள் தாங்கி ஒன்று புதன்கிழமை *(31)* நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீட்கப்பட்டுள்ளது.

காணியில் நிலத்தில் எரிபொருள் நிரப்பிய தாங்கி இருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜாவின் நீதிமன்ற அனுமதியுடன் தோண்டும் நடவடிக்கை புதன்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் கிராம சேவையாளர், பொலிஸார், இராணுவத்தினர் முன்னிலையில் குறித்த பகுதி கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது பாரிய இருப்பு எரிபொருள் தாங்கி ஒன்று எரிபொருட்கள் இல்லாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் தாங்கி புதைக்கப்பட்டுள்ள இடத்தில் நிலத்தில் மூன்று இடங்களில் தோண்டப்பட்டு எரிபொருள் தாங்கியில் இரண்டு இடங்களில் வெட்டப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டுள்ளது.

*16.3* அடிநீளமும், *7.9* அடி விட்டமும் கொண்ட எரிபொருள் தாங்கி மீட்கப்பட்டுள்ளது. எரிபொருள் தாங்கியில் வெட்டப்பட்ட இடத்தில் மணந்து பார்த்தபோது மண்ணெண்ணெய் மணம் காணப்பட்டுள்ளது.



இந்நிலையில் மீட்கப்பட்ட எரிபொருள் தாங்கியினை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று பாதுகாக்குமாறும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிபதி பணித்துள்ளார்.

# Sinha Lager and Sinha Stout from Lion Brewery Sri Lanka flies high at the Toronto Festival of Beer!











Back after a two-year Covid-induced hiatus, the Toronto Festival of Beer welcomed over 40,000 visitors this year, featuring over 80 exhibitors showcasing 400 different brands of beer. This was the first time Sri Lankan beers were featured at the festival, and Sinha beer was a major hit at Canada's largest celebration of beer. The three-day festival, which begun in 1996, is the signature beer festival in the country where celebrity chefs showcase their finest dishes and the best musicians in the country perform their most famous tunes.

Canadians have long indulged the jewel in the Lion's crown – Sinha Stout, which was endorsed by the late legendary beer hunter, Mr. Michael Jackson, as the best Stout in the world.

Sinha Stout was brewed in the late 1800's in the mountains of Sri Lankan, 6000 feet above sea level, and is known as the best kept secret amongst Stout connoisseurs. Brewed with water, malted barley, rice, hops, and caramel, this award winning traditional 8.8% Stout, takes your taste buds on a journey of sweet notes of chocolate, toffee, mocha, caramel, roasted barley and finishes with a liqueur like character. Sinha Stout pairs extremely well with dishes that offset the sweetness and caramel flavour in stout. Roasted foods, smoked foods, barbecued/grilled foods, salty cheeses, oysters, rich stews are popular favorites with Sinha Stout. Sinha Stout is available at the LCBO.

Sinha Lager, a multiple Gold award winner at the prestigious Monde Selection made its entry into Canada earlier this year and was a popular favourite at the festival as well. Sinha Lager, brewed with water, malted barley, rice, hops, and caramel is a golden lager with a crisp refreshing finish and offer hints of fruit, caramel, and subtle hop notes said Stefan Atton, Vice President of International Business for Lion Brewery (Ceylon) PLC. He further went on to say that the beer was first brewed in the mountains of Sri Lanka 6000 feet above sea level and is a perfect thirst quencher on a hot sunny day and pairs well with Asian, African, Middle Eastern, and Western cuisine.

Sri Lanka's celebrated beers, Lion Lager, and Lion Stout, come to Canada under the brand name Sinha, and offer locals and Sri Lankan expatriates in Canada a legendary taste of home. These world-acclaimed beers are a popular favourite at both the LCBO & the Beer Store.

Six pack of Sinha Lager is available at 90 Beer Stores across Brompton, Bolton, Georgetown, Mississauga, Oshawa, Ajax, Whitby, Mississauga, Oakville, Toronto, Etobicoke, York, Ottawa, and North York, retailing at just $17.45 for a six pack of 330ml bottles. Sinha Stout comes in 330ml bottles and retails for $3.10 at LCBO outlets. To find out the nearest store to you, go to the LCBO & Beer Store website.

With a rich heritage of close to 140 years, the Sinha range prides itself amongst Asia's greatest beers, winning global acclaim across every continent. Sinha Lager hails from the beautiful exotic island of Sri Lanka and boasts a history stretching back to 1881 when British explorer, Sir Samuel Baker, set up the Lion Brewery Ceylon during a hunting expedition in the cool climes of Nuwara Eliya. Beers from Lion Brewery (Ceylon) PLC are enjoyed in over 26 countries globally and the brewery exports over 3000 containers of beer across the world annually.


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
SINHA
–1881–
SINHA
LAGER
IMPORTED
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

Powered by

5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
MAHAANS +1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில்
தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய்
எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.

16 வது ஆண்டில்

உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022

## கனடா உதயன் சர்வதேச விருது விழா

Presented by



VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

### உதயன் விருதுகளின் பட்டியல்

- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA

**Saturday October 15th, 2022 at 6.00 pm**

விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ்விழா நடைபெறும் மண்டபம்

**Kennedy Convention Centre**

1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

**For More Information,**
call 416 732 1608, or 647 762 9512



செப்டம்பர் மாதம்

## ப்ராம்ப்ட்டன் மரங்களுக்கான மாதமாகும்!

ப்ராம்ப்ட்டன் மரங்களைக் கொண்டாட எங்களுடன் இணையுங்கள், இவ்விதமாக:

- மரம் வளர்ப்பதற்கான முனைப்புக்கள் மற்றும் திட்டங்கள் பற்றி தெரிந்துகொள்ளுதல்
- திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கெடுத்தல்
- குடியிருப்பாளர்களுக்கென கொடுக்கப்படும் இலவச மரக்கன்று ஒன்றைப் பெறுதல்
- வண்ணம் தீட்டும் போட்டியில் பங்கேற்றல் (பரிசு வெல்லும் வாய்ப்பு பெறுவதற்காக)

உங்களுக்கு பிடித்தமான மரத்துடன் ஒரு புகைப்படம் எடுத்து, **#BramptonTrees** உபயோகித்து சமூக ஊடகங்களில் பகிர்தல்

**brampton.ca**/trees
இல் மேலும் தெரிந்துகொள்ளுங்கள்

BRAMPTON

# LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில்: 09 - 09 - 1933



அரன் அடியில்: 16 - 09 - 2021

**திதி: 06-09-2022**

## அமரர்.
## திருமதி. டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்

*எமை ஈன்றெடுத்த எம் அன்புத் தாயே*
*உங்கள் இன்முகம் தான் எங்கேயம்மா*
*இவ்வுலகில் எமை விட்டுப் பிரிந்து*
*ஆண்டொன்று ஆனதே அம்மா*

*பாசத்தை நமக்கு ஊட்டி வளர்த்த*
*பண்பான எம் அன்னையே*
*கண்ணின் இமையானீர் அன்று*
*எம் கண்ணீரின் கதையானீர் இன்று*

*எங்கள் பாச ஒளிவிளக்கே*
*ஓர் ஆண்டு மறைந்தாலும் உங்கள் முகம்*
*எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது அம்மா*
*தெய்வமே எமை விட்டு சென்றதெங்கே*

*ஏங்கித் தவிக்கின்றோம், ஏமாந்து போகின்றோம்*
*மீண்டும் ஓர் பிறப்புண்டேல்*
*உமக்கே பிள்ளைகளாய் பிறப்போம் அம்மா*
*வாரும் அம்மா ஒரு முறையேனும் எங்களிடம்....*

*அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.*

*ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!*

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு: சந்திரகுமார் (மகன்) - 1(613) 266-0411
சுமதி (மகள்) - (416) 627-7202

# இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலை அர்ப்பணிக்கிறார் மோடி

## இந்திய கடற்படைக்கு புதிய கொடி அறிமுகம்

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தை கொச்சி கப்பல் தட்டும் தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். புதிதாக வடிவமைக்கப்பட்ட கடற்படை கொடியையும் அவர் அறிமுகம் செய்கிறார்.பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நேற்று மாலை கேரள மாநிலம் கொச்சிக்கு வந்தார். வேட்டி, சட்டை அணிந்து வந்த பிரதமர் மோடியை, கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், முதல்வர் பினராயி விஜயன் ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பின்னர், காலடி கிராமத்தில் உள்ள ஆதிசங்கராச்சாரியாரின் பிறப்பிடமான ஸ்ரீ ஆதிசங்கரர் ஜென்ம பூமிக்கு சென்று பிரதமர் வழிபட்டார். அதைத் தொடர்ந்து கொச்சியில் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட ரூ.4,500 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடக்கும் நிகழ்ச்சியில், புதிய ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பலை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இது, முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் ஆகும்.

இந்நிகழ்ச்சியில், இந்திய கடற்படைக்கான புதிய கொடியையும் பிரதமர் மோடி அறிமுகம் செய்கிறார். கடற்படை கொடியில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வடிவமைக்கப்பட்ட சிவப்பு பட்டைகள் நீக்கப்படுகிறது. புதிய வெள்ளைக் கொடியில், தேசியக் கொடி, அசோக சின்னம் மற்றும் நங்கூரம் ஆகியவை இடம் பெற்றிருக்கும். 1950ம் ஆண்டு முதல் தற்போது வரை கடற்படை கொடியில் 4வது முறையாக மாற்றம் செய்யப்படுகிறது.இந்திய கடற்படையில் ஏற்கெனவே



ஐஎன்எஸ் விக்ராந்த் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் இருந்தது.

இங்கிலாந்திடம் இருந்து வாங்கப்பட்ட இந்த கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1961 முதல் 1997ம் ஆண்டு வரை பணியாற்றியது. 1971ம் ஆண்டு நடந்த பாகிஸ்தான் போரில் இந்த கப்பல் முக்கிய பங்காற்றியது. ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பல், பணியில் இருந்து விடுவிக்கப்பட்டபின், 2002 முதல் 2012ம் ஆண்டு வரை அருங்காட்சியகமாக இருந்தது. அதன்பிறகு பயனற்ற நிலைக்கு சென்றதால், கடந்த 201415ல் இந்தக் கப்பல் உடைக்கப்பட்டது.இதையடுத்து இந்திய கடற்படையில் அதே பெயரில் புதிய விமானம் தாங்கி கப்பலை சேர்க்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, உள்நாட்டிலேயே அத்தகைய கப்பல் தயாரிக்கப்பட்டது. இந்த புதிய ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பல், கடந்த 2013ம் ஆண்டு கடலில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது.

கப்பலில் அனைத்து பணிகளும் முடிவடைந்ததால், சமீபத்தில் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.ரூ.20 ஆயிரம் கோடி செலவில், கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்பு பிரிவால் வடிவமைக்கப்பட்டு, கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்பட்ட புதிய போர்க்கப்பலில் பல நவீன தானியங்கி அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. 100க்கும் மேற்பட்ட இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தயாரிப்புகள் இந்த கப்பலில் இடம் பெற்றுள்ளன.இதுகுறித்து பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள செய்தியில், 'பாதுகாப்புத் துறையில், பிரதமரின் தற்சார்பு இந்தியா கொள்கைக்கு சிறந்த உதாரணமாக புதிய விக்ராந்த் ஐஎன்எஸ் கப்பல் இருக்கிறது' என தெரிவித்துள்ளது.

கடற்படை துணைத் தளபதி வைஸ் அட்மிரல் எஸ்.என்.கார்மேட் கூறும்போது, "புதிய கப்பலில், கடற்படை போர் விமானங்களை ஏற்றி இறக்கும் பரிசோதனை, வரும் நவம்பரில் தொடங்கி, அடுத்த ஆண்டு மத்தியில் முடிவடையும். முதல் சில ஆண்டுகளுக்கு இந்த கப்பலில் மிக்29கே ரக போர் விமானங்கள் இயக்கப்படும்" என்றார். கடற்படையில் ஐஎன்எஸ் விக்ராந்த் சேர்க்கப்படுவது, பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் தற்சார்பு கொள்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

**ஐஎன்எஸ் விக்ராந்தின் சிறப்பு:**

புதிய ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பல், 262 மீட்டர் நீளம், 59 மீட்டர் உயரம், 62 மீட்டர் அகலம் கொண்டதாகும். இதன் மொத்த எடை 40 ஆயிரம் டன்கள். கப்பலின் அதிகபட்ச வேகம் 28 நாட்ஸ் ஆகும். மொத்தம் 14 அடுக்குகள் கொண்ட இந்த கப்பலில் 2,300 அறைகள் உள்ளன. கடற்படை அதிகாரிகள், வீரர்கள் என 1,700 பேர் கப்பலில் இருப்பார்கள். 34 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இதில் இடம் பெற்றிருக்கிறது.

# கள்ளக்குறிச்சி மாணவி மரண வழக்கில் உயர் நீதிமன்ற கருத்து அவசியமற்றது: சீமான்



"கள்ளக்குறிச்சி மாணவி மரண வழக்கில் உயர் நீதிமன்றத்தின் கருத்து, அநீதிக்கு எதிராக நீதியைக் கேட்டு தர்மத்தைக் காக்க அதர்மத்தை எதிர்த்து போராடுகிற யாருக்குமே மனச்சோர்வையும், நம்பிக்கையின்மையையும் தரக்கூடிய ஒன்றாக உள்ளது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.சென்னையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி மாணவி மரண வழக்கை தமிழக அரசு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றியது.

அந்த வழக்கு சிபிசிஐடி விசாரணையில் உள்ளது. ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட விசாரணையில் இருந்துவரும்போது, நீதிமன்றம் அவசர அவசரமாக கருத்து கூறியிருப்பது, அவசியமற்றது இது எங்கேயும் நிகழாது.அதன்பின்னர் நீதிபதிகள் அங்கு கள ஆய்வுக்கு செல்கின்றனர். நீதிபதிகள் கள ஆய்வுக்கு செல்லும்போது நீதிமன்றம் இவ்வாறு கருத்து தெரிவிப்பது எவ்வளவு அவசியமற்றது, அது எவ்வளவு தவறான முன்னுதாரணமாக போகும் என்பதை கவனிக்க வேண்டும்.நீதிபதிகள் விசாரணை, நடந்துகொண்டிருக்கும் சிபிசிஐடி விசாரணையின் முடிவுகள் இந்தக் கருத்தை ஒட்டித்தான் வரும். முதலில் கருத்தை அறிவித்துவிட்டு விசாரணை என்பது, எவ்வளவு வேடிக்கையானது. அது இதுவரை எங்குமே நிகழாதது. உச்ச நீதிமன்றமே என்றாலும்கூட பிணை கோரினால், பிணை கொடுக்க வேண்டுமே தவிர அதற்காக தீர்ப்பையே கொடுப்பது எப்படி சரியாக இருக்கும். அது ஏற்புடையதல்ல. உச்ச நீதிமன்றமே அதை வலியுறுத்தியிருக்கிறது.

பிணை கேட்டால் பிணை கொடுக்க வேண்டும், வழக்கின் சாராம்சத்தையொட்டி தீர்ப்பையே வெளியிடுவது எப்படி சரியாக இருக்கும்.எனவே, இது மிகப்பெரிய தவறு. மிகப் பெரிய தவறான முன்னுதாரணம். கடைசி நம்பிக்கையாக நமக்கு இருப்பது நீதிதான். கடவுளின் அவதாரங்களாக நீதிபதிகளை மக்கள் பார்க்கின்றனர். அவர்கள் இதுபோன்ற முடிவெடுப்பது என்பது மிகுந்த மனச்சோர்வை தருகிறது. அநீதிக்கு எதிராக நீதியைக் கேட்டு தர்மத்தைக் காக்க அதர்மத்தை எதிர்த்து போராடுகிற யாருக்குமே மனச்சோர்வையும், நம்பிக்கையின்மையையும் தரக்கூடிய ஒன்றாகத்தான் இதை நான் பார்க்கிறேன்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, கள்ளக்குறிச்சி மாணவி மரண வழக்கில் கைதான பள்ளி தாளாளர் உள்ளிட்ட 5 பேருக்கும் நிபந்தனை ஜாமீன் வழங்கிய சென்னை உயர் நீதிமன்றம், மருத்துவ அறிக்கையின்படி கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி மாணவி பாலியல் துன்புறுத்தலோ, கொலையோ செய்யப்படவில்லை. அவர் தற்கொலைதான் செய்துள்ளார் என்று கூறியிருந்தது. இதை முன்வைத்தே சீமான் மேற்கண்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

# "8 வழிச்சாலை திட்ட விவகாரத்தில் திமுகவின் இரட்டை வேடம் அம்பலம்" வானதி சீனிவாசன்

"எதிர்கட்சியாக இருந்தபோது அரசியல் ஆதாயத்திற்காக வளர்ச்சி திட்டங்களை முடக்கியதற்காக மக்களிடம் திமுக மன்னிப்பு கோர வேண்டும்" என பாஜக மகளிர் அணி தேசிய தலைவரும், எம்எல்ஏவுமான வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த 2016ல் முதல்வராக இருந்த ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, 2021 சட்டப்பேரவைத் தேர்தல் வரும் வரை நான்கரை ஆண்டுகள், தமிழகமே போராட்டகளமாக இருந்தது.

இயற்கை எரிவாயு திட்டம், நியூட்ரினோ திட்டம், சென்னை சேலம் எட்டு வழிச்சாலை திட்டம், எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம், மின் பாதை அமைக்கும் திட்டம், மேம்பாலங்கள், ரயில் பாதைகள், நெடுஞ் சாலைகள் என்று மத்திய, மாநில அரசுகளின் எந்த வளர்ச்சித் திட்டங்களாக இருந்தாலும் அவற்றை எதிர்ப்பது, அவற்றுக்கு எதிரான அவதூறான செய்திகளை பரப்பி பொதுமக்கள், விவசாயிகளிடம் அச்சத்தை விதைப்பதுதான் போராளி அவதாரம் எடுத்தவர்களின் நோக்கமாக இருந்தது. அதில் அவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது. மக்களிடம் பயத்தை ஏற்படுத்தி, திமுக அரசியல் ஆதாயம் அடைந்தது.நான்கரை ஆண்டுகால அதிமுக ஆட்சியில் மத்திய, மாநில அரசுகள் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அதற்கெதிராக போராட்டங்களை நடத்திய, திடீர் போராளிகள், 2021 மே 7ம் தேதி திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் காணாமல் போய்விட்டார்கள்.

டாஸ்மாக் மதுக்கடைக்கு எதிராக பாடல்களைப் பாடி புரட்சி செய்த, ஒரு புரட்சியாளர் இப்போது எங்கிருக்கிறார் என்பதே தெரியவில்லை. எதிர்க்கட்சியாக இருந்தபோது, சென்னை சேலம் எட்டு வழிச்சாலை திட்டத்தை எதிர்த்த திமுக, பல்வேறு குறுங்குழுக்களையும், தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் நாட்டுக்கு எதிராக செயல்படுபவர்களையும் தூண்டிவிட்டு, அந்த திட்டத்தையே முடக்கியது. இப்போது திமுக ஆட்சியில் இருப்பதால், சென்னை சேலம் எட்டு வழிச்சாலை திட்டத்தை நிறைவேற்ற முனைகிறார்கள். தமிழக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஒரு படி மேலே போய், "சென்னை சேலம் எட்டு வழிச்சாலை திட்டத்தை திமுக எதிர்க்கவில்லை. இத்திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுடன் பேச்சு நடத்தி, உரிய இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றுதான் சொன்னோம்" என்கிறார். ஆனால், இது தகவல் தொழில்நுட்ப யுகம் என்பதால், முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர், எட்டு வழிச்சாலைக்கு எதிராக பேசியதை எல்லாம், சமூக ஊடகங்களில் பொதுமக்களே அம்பலப்படுத்தியுள்ளனர்.

இப்படி, திமுகவின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது. அதுமட்டுமல்ல, அதிமுக ஆட்சியில் வளர்ச்சித் திட்டங்களை முடக்க, பல்வேறு தரப்பினரை தூண்டிவிட்டு, திமுக நடத்திய சதித் திட்டங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. இனி மக்களிடம் இருந்து திமுக தப்பிக்க முடியாது. வளர்ச்சி திட்டங்களுக்கு தடையாக இருந்ததற்காக மக்களிடம் திமுக மன்னிப்பு கோர வேண்டும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கை நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் சிறார்கள்

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்**



***எச்சரிக்கை: பலவீனமானவர்கள் வாசிப்பதைத் தவிர்க்கவும்***

**ச**ர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுக்கு ஏராளமான நிபந்தனைகளுடன் கடனளிக்க முன்வந்துள்ளது என்று நேற்று (வியாழன் செப்டம்பர் 1) செய்தி வெளியானது. இலங்கை அரசு கோரிய தொகையைவிடக் குறைவான தொகையையே ஐ எம் எ∴ப் அளிக்க முன்வந்துள்ளது. கவனிக்கவும் "அளிக்க முன்வந்துள்ளது". அதுவும் கட்டம் கட்டமாகவே அந்த நிதியுதவி (நீண்டகால கடன்) அளிக்கப்படும்.

நாடு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில், ஐ எம் எ∴ப் கூறியுள்ள நிபந்தனைகள் நீண்டகால அடிப்படையில் மக்களை - அதிலும் குறிப்பாக அடித்தட்டு மக்களை - மிகவும் கடுமையாக பாதிக்கும் என்பது பொதுவாக அறியப்பட்ட ஒன்றுதான். ஆனால் அந்த தாக்கங்களைத் தாண்டி நாடு மீண்டெழ வேண்டுமாயின் சீர்திருத்தங்கள் தேவைப்படும் என்பதை மறுக்க முடியாது. நீண்டகால அந்த நோயைத் தீர்க்க கசப்பான மருந்து அவசியமானது. இதற்கு நாடெங்கும் எதிர்ப்புகள் எழவே செய்யும், அதை சமாளிப்பதில் தான் ஆட்சியில் உள்ளோரின் திறமையும், அரசியல் சாணக்கியத்தனமும் உள்ளது.

ஆனால் கட்டுரை இந்த நெருக்கடிகளுக்குப் பின்னர், அதிகம் பேசப்படாமல் அரசால் திட்டமிட்டு மறைக்கப்படும் செய்தியாகவே இதுவுள்ளது. ஆனால் அண்மையில் இலங்கை சென்றிருந்த ஐக்கிய நாடுகள் சபையில் சிறார்கள் நல அமைப்பான யுனிசெ∴ப்பின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் ஜார்ஜ் லரேயா - அட்ஜெ அதை போட்டுடைத்துள்ளார்.

"இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடரும் சூழலில், மிகவும் ஏழைகள், அதிலும் மிகவும் பலவீனமான சிறார்கள் இதற்கான கடுமையான விலையைக் கொடுக்கின்றனர்".

நாடு விடுதலையடைந்த பிறகு, இப்படியானதொரு பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டதில்லை, அதன் காரணமாக குடும்பங்கள் தமது நாள் பொழுதின் முக்கிய உணவைத் தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது, அதை வாங்கும் அளவிற்கு மக்களிடம் பணமில்லை. இதன் காரணமாக குழந்தைகள் தமது அடுத்த வேளை உணவு எப்போது கிடைக்கும் என்பது தெரியாமல் ஒவ்வொரு நாள் இரவும் உறங்கச் செல்கின்றனர் என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். இதன் காரணமாக தெற்காசியாவிலேயே இரண்டாவது மோசமான போ'ாக்கின்மை அல்லது ஊட்டச்சத்துக் குறைபாடு இலங்கையில் நிலவுகிறது என்று அவர் விளக்கியுள்ளார்.

அந்த அறிக்கை ஆங்கிலத்தில் யுனிசெ∴ப் அமைப்பின் இணையத்தில் வெளியானாலும், அது உள்நாட்டில் பரவலாகச் செய்தியாகப் பரவாமல் இருப்பதை ஆனால் இலங்கை அரசு பார்த்து கொண்டது. ஊடகச் சுதந்திரம் என்பது "கிலோ என்ன விலை" என்று கேட்கப்படும் ஒரு நாட்டில், அரசின் ஊதுகுழலாக இருந்தால் மட்டுமே பிழைத்திருக்க



முடியும் என்ற சூழலில், அரசு விரும்பாத எதையும் ஊடகங்கள் பிரதிபலிப்பதில்லை. சில சமயம் "ஊறுகாயைத் தொட்டுக் கொள்வது போல், ஒரு பத்தி செய்தியாகப் போட்டு அத்தோடு மூடுவிழா செய்துவிடுவார்கள். இது போர்க்காலத்திலிருந்து தொடரும் ஒரு நடவடிக்கையே.

இதை சில வாரங்களுக்கு முன்னரே சோமாலியா போன்று ஆகிறதா இலங்கை? என்ற தலைப்பில் கனடா உதயன் பத்திரிகையில் இந்த எழுத்தாளர் கேள்வி எழுப்பியிருந்தார். அது இப்போது ஐ நா பிராந்தியப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் தோராயமாக பாதி விழுக்காடு குழந்தைகள் ஏதோவொரு வகையில் நெருக்கடியைச் சந்திக்கிறார்கள், அவர்களுக்கு உடனடி உதவி தேவைப்படுகிறது என்கிறது யுனிசெ∴ப் அறிக்கை. கடந்த இரண்டு ஆண்டுகளாக சுமார் 50 லட்சம் குழந்தைகளின் படிப்பு கொரோனா பெருந்தொற்று காரணமாகத் தடைப்பட்டிருந்தது. மாணவர்களின் பாடசாலை வருகை தொடர்ந்து தடம் புரண்டுள்ளது. தற்போதைய நெருக்கடி காரணமாக சிறார்கள் பல வகைகளில் சிக்குண்டுள்ளனர்-அவர்களுக்கு சூடான ஊட்டச்சத்துள்ள உணவு கிடைப்பதில்லை, கற்றலுக்குத் தேவையான அடிப்படை எழுது பொருட்கள் கிடைப்பதில்லை, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று மிகவும் தெட்டத்தெளிவாக அந்த அறிக்கை கூறுகிறது.



ஆனால் "பின் வாசல் வழியாக ஜனாதிபதியாக வந்தவரின்" அரசு இந்த அறிக்கை பரவாமல் பார்த்துக்கொண்டது. அது மட்டுமின்றி தொடரும் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது, சுரண்டப்படுவது, அழுத்தங்களுக்கு ஆளாகி உடல் மற்றும் மனரீதியாக பாதிக்கப்படுவது ஆகியவை இடம்பெறுகின்றன என்று துறைசார் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வறுமை காரணமாக 10,000 அதிகமான குழந்தைகள் நிறுவனங்களின் பராமரிப்பில் உள்ளனர். அப்படியான நிறுவனங்களில் சிறார்கள் வளர்வது ஆரோக்கியமானதல்ல, அது நீண்டகால அடிப்படையில் அவர்களை உளரீதியாக பாதிக்கும், குடும்ப பிணைப்பு இல்லாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அதிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்து அல்லது அவர்களின் இளைமைக் காலம் ஆரோக்கியமானதாக இருக்க வழி செய்ய அரசு தவறிவிட்டது.

"இப்படியான போக்கு தொடருமாயின், பல தசாப்தங்களாக சிறார் மேம்பாட்டில் பெறப்பட்ட பெறுபேறுகள் விரயமாகிவிடும், அதில் சில நிரந்தரமாக அழிந்து போய்விடும்" என்று ஜார்ஜ் லரேயா - அட்ஜெ தனது அறிக்கையில் மிகவும் வருந்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. அவர்களுக்கு உடனடியாக நிதியுதவிகள் செய்யப்பட்டு, நிலைமை மேலும் மோசமடையாமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், இல்லையென்றால் நெருக்கடி தொடரும் நிலையில், விளைவுகள் மோசமாக இருப்பதைத் தவிர்க்க இயலாது என்பது யதார்த்தமான உண்மை.

ஆரம்ப பாடசாலை தொடங்கி உயர்தர கல்வி வரை தொடர்ச்சி என்பது மிகவும் அவசியமானது, அதிலும் குறிப்பாகச் சிறுமிகள் விடயத்தில் இது மேலும் கூடுதலாக முக்கியமானதாகிறது. கற்றலில் அந்த தொடர்ச்சி விடுபட்டுப் போனால், அது அவர்களின் வாழ்நாளில் கல்வி, வேலை வாய்ப்பு, சமூகப் பொருளாதார மேம்பாடு, குடும்ப வாழ்க்கை ஆகியவை மீட்டெடுக்க முடியாத இழப்பைச் சந்திக்க நேரிடும் என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வறிக்கை கூறுகிறது.



அதுமட்டுமின்றி ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக ஆரம்பக்கட்ட வாழ்க்கையில் எதிர்வினைகளைச் சந்திக்கும் சிறார்கள் குழந்தை தொழிலாளர்களாகச் சுரண்டப்படுவது, பாலின அடிப்படையில் வன்முறையை எதிர்கொள்வது ஆகிய சூழல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அது சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். வறுமை காரணமாக ஏற்படும் சமூக தாக்கங்களுக்கு அப்பாற்பட்டு ஊட்டச்சத்து குறைபாடு உயிராபத்துக்களை ஏற்படுத்த கூடிய நோய்களுக்கும் இட்டுச் செல்லும்.

இவையெல்லாம் ஒரு தேசத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை பல ஆண்டுகள் பின் நோக்கி இழுத்துவிடும். அதன் காரணமாக உழைக்கும் திறன், மனிதவள மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி ஆகியவை கடுமையான பின்னடைவைச் சந்திக்கும். அதை அரசு உணர்ந்தாகத் தெரியவில்லை.

"நான் இலங்கையில் கண்டது தெற்காசியாவிலுள்ள மற்ற நாடுகளுக்கு எச்சரிக்கை" என்று யுனிசெ∴ப்பின் பிராந்தியப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதனிடையே, "தான் பிறந்த போது, இலங்கை கடனில் இல்லை, போரிலிருந்து மீண்டுகொண்டிருந்த பிரிட்டனுக்கு கடன் கொடுக்கக் கூடிய அளவிற்கு எம்மிடம் போதிய நிதி இருந்தது. நாங்கள் ரப்பர் மற்றும் தேயிலை மூலம் ஏராளமான வருமானத்தை ஈட்டியிருந்தோம், ஏன், எமது சொந்த பணத்தில் நீர்த்தேக்கம் ஒன்றையும் கட்டியிருந்தோம்" என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வாரம் கொழும்பு சென்றிருந்த ஐ எம் எ∴ப் குழுவுடனான உரையாடலின் போது தெரிவித்திருந்தார்.



இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் உதயன் சார்பில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் சில அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தெரிய வந்தன. அதன் விவரங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி சிறார்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த சர்வதேச ஆய்வுகள் குறித்த விவரங்கள் தொகுக்கப்படுகின்றன. அவற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.

# புதிய இலங்கைக்கான கட்டமைப்பு: பிராந்தியங்களின் ஒன்றியம்

— இராஜ் கொன்சல்கோரலே

நமது சிக்கல்களை உருவாக்கிய போது பயன்படுத்திய அதே சிந்தனையால் தீர்க்க முடியாது. - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ளது, அதன் அரசியல்வாதிகள் மதிப்பிழந்து விட்டார்கள். அவர்கள் ஊழல், திறமையின்மை மற்றும் பயனற்ற தன்மையை நிலைநிறுத்தும் ஒரு அமைப்பால் உருவாக்கப்பட்டவர்கள். பவுத்தம் போல் கடந்து செல்லும் சடங்குகளின் போர்வையைப் போலவே சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் எளிதானது. அதன் மக்களின் உள்ளார்ந்த ஆன்மாவைச் சந்திக்கும், அரசியல்வாதிகளின் சக்தியைக் குறைத்து, மக்களின் உண்மையான சக்தியை மேம்படுத்தும் ஒரு புதிய ஆட்சி மாதிரி தேவை.

மறைந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களால் எழுதப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற யாப்பு வரைவு தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை முன்வைத்ததற்காக கலாநிதி நீலன் திருச்செல்வம் புலிகளால் கொல்லப்பட்டார், ஆனால் நல்லகாலமாக கொலைகார புலிகள் இப்போது இல்லை. இந்த முன்மொழிவை மறுபரிசீலனை செய்து, நாட்டை அதன் இருண்ட கடந்த காலத்திற்கு அல்ல, எதிர்காலத்தை நோக்கி அழைத்துச் செல்லக்கூடிய ஒரு நிர்வாக மாதிரியை அறிமுகப்படுத்துவதற்கான காலநிலை சரியானது. தற்போதைய அமைப்பு அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டதால் மக்கள் நோய்வாய்ப்பட்டுச் சோர்வடைந்துள்ளனர். நாட்டில் இருக்கும் ஐயத்திற்கு இடமில்லாத திறமையை உருவாக்க வேண்டுமானால், தற்போதைய அமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு முறைமை மாற வேண்டும்.

தமிழ் இன மோதல்

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களை உள்ளடக்கிய இனச் சிக்கல் இரு சமூகங்களின் தலைவர்களால் உருவாக்கப்பட்டதே தவிர, சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களால் அல்ல என்ற உண்மையை நாம் உணரவேண்டும். தமிழர்களுக்கு குறைகள் இருந்தன என்பது உண்மை. ஆனால் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்துடன் ஒருவர் அடையாளம் காணக்கூடிய சமகால சிக்கலை உருவாக்கும் நேரத்தில், அவை சமாளிக்க முடியாதவை அல்ல. காலப்போக்கில் அது என்ன ஆனது, அளவு மற்றும் தீவிரம் ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டது. ஒரு சறிய சிக்கல் காலப்போக்கில் ஒரு மலையாக மாறியது என்றும், அது ஒரு எரிமலை என்றும் வாதிடலாம். 1983 இல் அப்போதைய அரசாங்கத்தின் காலத்தில் கலவரம் பூதாகாரமாக வெடித்த. மீதி, எல்லோரும் சொல்வது போல் ஒரு வரலாறு ஆகும்.

எனது அறிவுக்கு எட்டிய வரையில், சிங்கள, தமிழ் மக்கள் எந்தவொரு பெரிய மோதலிலும் ஈடுபடவில்லை. நாட்டில் மன்னர்கள் மற்றும் மகாராணிகள் ஆட்சி செய்த காலத்திலும் கூட அவர்களுக்கிடையில் மோதல் இருந்ததில்லை. இலங்கைத் தீவின் உள்ளூர் இராச்சியங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்தியாவில் இருந்து மன்னர்கள் படையெடுத்து வந்தார்கள். அவ்விதம் வந்த படையெடுப்பாளர்களைத் தோற்கடிக்க இலங்கையை ஆண்ட மன்னர்கள் நடத்திய போர்களும் வரலாற்றை நிரப்பியுள்ளது.

நாட்டின் மக்கள்தொகையானது முக்கியமாக இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் வரலாறு முழுவதும் வெவ்வேறு காலங்களில் வந்தவர்கள். நாட்டின் பழங்குடி மக்கள் - ஆதி வாசிகள் அல்லது வேடர்கள் - ஆவர். இச்சூழலில், எஞ்சியவர்கள் அனைவரும் தீவைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்ட ஆக்கிரமிப்பாளர்கள் ஆவர்.

ஆனால், அண்மைக்காலமாக அது தமிழர்களின் வாழ்விடமா இருக்கிறதா? அவர்களின் இனம், அவர்களை வன்முறைக்கு இலக்காக்கியுள்ளது. 1983 ஆம் ஆண்டு அரச அனுசரணை பெற்ற குண்டர்கள், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளைத் தவிர, நாட்டில் தமிழர்கள் பாதுகாப்பாக இல்லை என்பதை துலாம்பரமான வகையில் வெளிப்படுத்தினர். இது போன்ற மனிதாபிமானமற்ற செயல்களை அரசு எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் மீண்டும் செய்யலாம் என்ற சமிக்ஞையை தமிழ் சமூகத்திற்கு அனுப்பியது.

மோதலுக்கான தீர்வைத் தேடுவதில், தமிழர்கள் நாட்டில் எங்கு வாழ்ந்தாலும் அவர்களது வீடுகளிலும் பணியிடங்களிலும் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க முடியும் என்பதே முதன்மையானது. இது அனைத்து இலங்கையர்களின் வேட்கையாக இருக்க வேண்டும்

இலங்கைத் தமிழர்கள்

சமகால இலங்கையில், தமிழ் இனச் சிக்கல் தொடர்பான எந்தவொரு விவாதத்திலும், தமிழர்களிடையே பல்வேறு வேணவா பரிமாணங்கள் உள்ளன. அவை சம்பந்தப்பட்ட தமிழ் குழுவைப் பொறுத்து ஆராயப்பட வேண்டும், அதாவது, இலங்கைத் தமிழர்கள் என்று குறிப்பிடப்படும் குழு, தீவில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்தியாவிலிருந்து வந்த தமிழர்கள், குறிப்பாக தீவின் வடக்குப் பகுதி, அல்லது இந்தியாவில் இருந்து அண்மையில் வந்தவர்கள் பெரும்பாலும் நாட்டின் மத்தியப் பகுதியில் வாழ்கின்றன்றனர். அவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

அனைவரும் இப்போது இலங்கைத் தமிழர்கள் ஆவர். ஆனால் பல தசாப்தங்களாக நாட்டை வடிகட்டியுள்ள இனச்சிக்கல் முன்னாள் பிரிவினரைப் பற்றியது. இருப்பினும் பிந்தைய பிரிவினருக்கும் அதன் குறைகள் மற்றும் வேட்கைகள் உள்ளன.

இலங்கையில் உள்ள தமிழ் சமூகம் ஒரே மாதிரியான சமூகம் அல்ல. இருப்பினும் இரு குழுக்களும் பொதுவான சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. முதன்மையாக நாட்டில் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக.

ஐன்ஸ்டீன் கூறியது போல், அனைத்துத் தமிழர்களுக்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் முன்னோக்கிச் செல்லும் வழியைப் பற்றிய விவாதத்தை கட்டுரையாளர் பரிந்துரைக்க விரும்புகிறார். சிக்கல்களை உருவாக்கப் பயன்படுத்திய அதே சிந்தனையால் சிக்கல்களை தீர்க்க முடியாது.

பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளிடம் இருந்து தொடங்கும் சிக்கலை உருவாக்குவதற்கு பல நபர்களும் குழுக்களும் தெரிந்தோ தெரியாமலோ பங்களித்தனர் என்பதில் ஐயமில்லை. தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளும் கூட சிக்கலை உருவாக்குவதற்கு பங்களித்தனர் எனலாம்.
சிலர் இன்னும் அதைத் தொடர்கின்றனர். எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று சமகாலக் கண்ணோட்டத்தில் மகா சங்கத்தின் பிரிவுகளையும் இதில் சேர்க்கலாம். அவர்கள் ஒரு நிரந்தர தீர்வை எட்டுவதற்கு இடையூறாக இருக்கிறார்கள். மேலும் பலம் வாய்ந்த தமிழ்ப் புலம்பெயர்ந்தோர், குறைந்தபட்சம் ஒரு பிரிவினராவது, தொடர்ந்து இடையூறாக இருந்து வருகின்றனர். கலந்துரையாடலுக்கான முதல் அம்சம் என்னவென்றால், சிக்கலை உருவாக்குவதற்குப் பங்களித்த மற்றும் பயன்படுத்தப்பட்ட காரணிகள், சமகால சூழ்நிலைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கான அடிப்படையாக இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. இதைத்தான் நாடு செய்ய வேண்டுமா?

தோல்வியடைந்த ஆட்சி மாதிரிகள்

காலனித்துவ மற்றும் பிந்தைய காலனித்துவ காலத்தில், இலங்கைத் தமிழ் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் ஒரு பொது எதிரியான பிரித்தானிய காலனித்துவவாதிகளைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டிருந்திருந்தார்கள். இருந்தும் சிக்கல் உருவாதுவதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் சிக்கலுக்கு தீர்வு காண்பது தொடர்பாக கலந்துரையாடல்களும் விவாதங்களும் நடைபெற்றன. இப்போதும் நடைபெற்று வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு, இணைக்கப்பட்ட மாகாணத்திற்குள் ஒரு தீர்வையே தமிழர்கள் முன்வைக்கிறார்கள்.

பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் ஆளுகை மாதிரியின் கட்டமைப்பிற்குள் வடக்கு மற்றும் கிழக்கிற்கான சுயநிர்ணயம் உருவாக்கப்பட வேண்டும்.

வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரி, வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரிக்கு முந்தைய ஆட்சி மாதிரிகள் பரவலாக்கப்பட்டதால், அது சிறிதும் பொருத்தம் இல்லை. தளர்வான கட்டமைப்புகள். மொத்தத்தில், பல்வேறு காரணங்களுக்காக, தீவுக்குள் இருந்த இராச்சியங்கள் மற்றும் பிற நிர்வாக அமைப்புகளுக்கு பல்வேறு வகையான சுயநிர்ணய உரிமைகள் இருந்தன.

இந்த வரலாற்றுப் பின்னணியில், பிரித்தானிய காலனித்துவ எசமானர்களும், அவர்களுடன் இணைந்து செயற்பட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் உயரடுக்கினரும் டொனமோர் அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியதன் பின்னர் சோல்பரி அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியதன் மூலம் நாட்டில் உள்ள ஆளுமையின் உள்ளார்ந்த, வரலாற்றுத் தன்மையை அகற்றினர். 1972 மற்றும் 1978 அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் போது இலங்கையர்கள் இந்தப் பாதையில் தொடர்ந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த மாதிரியில் பிளவுகள் தோன்றத் தொடங்கின. மேலும் சிங்களம் மற்றும் முதன்மையாக பவுத்த ஆளுமை ஆதிக்கம் இந்தப் பிளவுகளை விரிவுபடுத்த வழிவகுத்தது. பிராந்திய சபைகள் (பண்டாரநாயக்க/செல்வநாயகம் உடன்படிக்கை), மாவட்ட சபைகள் (சேனநாயக்கா/செல்வநாயகம் உடன்படிக்கை) மற்றும் பிராந்தியங்களின் ஒன்றிய சட்டமூலம் (குமாரதுங்க/திருச்செல்வம் தீர்மானங்கள்) மற்றும் இறுதியாக மாகாண சபைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற முன்மொழிவுகள் மூலம் - இந்தியாவின் வேண்டுகோள் - இந்தப் பிளவுகளை தீர்க்க சில அரசியல் தலைவர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புலிகளின் வருகை

மோதலுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்காத நிலையில், தீர்வாக தீவிற்குள் தனிநாடு ஒன்றை அடைவதற்கு வன்முறை வழியை (புலிகள்) தேர்ந்தெடுத்த போது சிக்கல் தீவிரமடைந்தது. புலிகளின் வன்முறைக்கு எந்த நியயமும் இருக்க முடியாது என்றாலும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களிடையே உள்ள அடிப்படை வேணவா மனப்பான்மை (மற்றவர்களால்) ஒருபோதும் புரிந்து கொள்ளப்படவில்லை. "தமிழ்" கோரிக்கைகளை முன்வைத்து பரப்புரை செய்த புலிகள் ஏகபோக ஆயுதக் குழுவாக பரிணமித்தனர். ஆயுதம் ஏந்தாத அரசியல் குழுக்களும் "தமிழ்" கோரிக்கைகளுக்காகப் பரப்புரை செய்தன.

விடுதலைப் புலிகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண பல்வேறு தரப்பினரும் முயற்சிகள் மேற்கொண்டனர்.
விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையில் அத்தகைய தீர்வைக் காண்பதற்கு நோர்வே மத்தியஸ்தம் செய்ய முயற்சித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது, விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்க ஆயுதப் படைகளுக்கும் இடையிலான முழு அளவிலான யுத்தம் 2009 இல் புலிகளின் இராணுவ அழிவோடு முடிந்தது.

சஞ்சீவ இரணவீரவினால் நந்திக்கடல் கடற்கரையில் நாம் என்ன புதைத்தோம் என்பதில் தெளிவாக இருப்போம் என்ற தலைப்பில் மிகவும் சுவாரஸ்யமான கட்டுரை 26 யூலை 2021 அன்று கொழும்பு டெலிகிராப்பில் வெளியிடப்பட்டது. **(https://www.colombotelegraph.com/index.php/let-)** எரிக் சொல்ஹெய்ம் ஆற்றிய பங்கும் ஆராயப்பட்டு அவருடனான நேர்காணலும் கட்டுரையின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

பிராந்தியங்களின் ஒன்றியத்தின் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய மாதிரி யாப்பு உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய அமைப்பின் எதிர்மறைகளைப் பிரதிபலிக்கக் கூடாது. எமது சிந்தனை எதிர்காலத்தை நோக்கி செலுத்தப்பட வேண்டும், கடந்த காலத்தின் அல்லது நிகழ்காலம் பற்றியதல்ல.

(ஓர் ஆண்டுக்கு முன்னர் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை **The Island** நாளேட்டில் **(https://island.lk/frame-work-for-a-new-sri-lanka-a-union-of-regions/)** வெளிவந்தது.

**முக்கிய பகுதிகள் மட்டும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. - *கனடா நக்கீரன்*)**

# அதிகப்படியான சிந்தனை (Over-Thinking)



**எ**ந்த காரியம் செய்வதற்கு முன் நன்றாக சிந்தித்து செயற்றப்பட வேண்டும் என நம் முன்னோர்கள் கூறுவர் அவ்வாறு சிந்தித்து செயற்படும் விடயம் தவறான பின் விளைவுகளை தராது.

அனால் அந்த சிந்தனை அளவுக்கு அதிகமாக சென்றால் பாரிய விளைவுகளை தரக்கூடும்.

இது அதிகப்படியான யோசனை (Over-Thinking) என்று கூறப்படும். இதனை முடிந்தளவு எமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதே சிறந்தது. இவ்வாறான சிந்தனைகள் பல வடிவங்களில் மனிதர்களுக்கு வரக்கூடும் சிலர் நடந்து முடிந்ததை பற்றி எந்நேரமும் சிந்திப்பர், சிலர் நடக்க போவதை பற்றி அதிகமாக சிந்திப்பர் மற்றும் சிலர் எதை பற்றி சிந்திக்கின்றோம் என்றே தெரியாமல் பல விடயங்களை ஒரே சமயத்தில் சிந்திப்பர்.

**இவ்வாறு அளவை தாண்டி யோசிப்பதால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்னவென்று பார்க்கலாம்.**

- எமது கட்டுப்பாட்டை மீறிய சிந்தனைகள் எம்மை அறியாமலே எம்மை மன சோர்விற்கு உள்ளாக்கிவிடும்.

- எமது பொன்னான நேரம் அர்த்தமில்லாமல் வீணாகிவிடும். அர்த்தமற்ற சிந்தனைகள் ஏற்றப்படும் போதும் நாம் எமக்கு தெரியாமலே அதிகமான நேரத்தை செலவு செய்து விடுவோம்.

- அன்புக்குரியவர்களிடம் கோவமாக நடந்துக்கொள்ளல். அதிகப்படியான யோசனையில் நாம் மூழ்கி இருக்கும் பொழுது எம்மிடம் யாரும் சாதாரணமாக கதைக்க வந்தால் கூட அதை தொல்லை என நினைத்து அவர்களிடம் நாம் எமது கோபத்தை உடனே வெளிப்படுத்த முற்படுவோம்.

- முக்கியமான வேலைகளை மேற்கொள்ள தவறவிடுதல். வாழ்க்கையில் நாம் நாளாந்தம் செய்து முடிக்க அதிக கடமைகள் இருக்கும் அளவற்ற யோசைகள் காரணமாக அந்த பணிகளை செய்து முடிக்க மறந்து விடுவோம் மற்றும் அந்த கடமைகள் மீதான ஆர்வமும் இல்லாமல் சென்று விடும் இதனால் பலவிளைவுகளை சந்திக்கநேரிடும்.

- வாழ்க்கையில் முன்னேற்றம் தடைப்படும். நடந்ததையே நினைத்துக் கொண்டிருப்பதால் நாம் எமது வாழக்கையில் முன்னேறுவதற்கான புதிய முடிவுகளை எடுப்பதற்கு தயக்கமடைவோம். இதனால் எமது முன்னேற்றம் தடைப்படும்.

- உடல் ஆரோக்கியம் மற்றும் நம் அழகு பாதிக்கப்படும். யோசனை நிறைந்த மனம் என்றும் புத்துணர்ச்சியாக இருக்காது. தெளிவற்ற மனம் இருந்தால் எமது ஆரோக்கியமும் பாதிக்கப்படும் எமது அழகும் பாதிக்கப்படும்.

**அதிக யோசனையை தவிர்ப்பதற்கான வழி-முறைகள் என்ன?**

**தியானம் மேற்கொள்ளல் --** தினமும் நாம் செய்யும் தியானம் எமது மனதை ஒரு நிலைப்படுத்தும் இதனால் அவசியமற்ற சிந்தனைகள் எமது மனதில் தோன்றாது தியானத்தின் போது எமது கற்பனையில் வேறு சிந்தனைகள் எதுவுமின்றி எமது கடவுள், ஒரு மலர் அல்லது இயற்கை காட்சிகள் என நினைத்தால் மேலும் சிறப்பானது.

**உடற்பயிற்சியை மேற்றக்கொள்ளல் --** உடற்பயிற்சியினால் ஏற்படும் புத்துணர்வு எமது கவனத்தை சிதற விடாது, எமது ஆரோக்கியம் மற்றும் அழகின் மீது அக்கறை செலுத்த வைக்கும். இதனால் தேவையற்ற சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் நாம் கொடுக்க மாட்டோம்.

**சிறந்த பொழுது போக்கை தெரிவு செய்தல் --** நாம் தனிமையாக இருந்தால் அதிக சிந்தனைகள் தோன்றும் எமது தனிமையை ஈடு செய்யும் வகையிலான பொழுது போக்கில் ஈடுபட்டால் தனிமையற்ற உணர்வு தோன்றும்.

**வாசித்தல் --** புத்தகங்கள் வாசிப்பதை எமது அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாக வைக்க வேண்டும். வாசிப்பதால் எமது அறிவு வளரும் மேலும் மற்ற அவசியமற்ற சிந்தனைகளில் எம்மை மூழ்க விடாது. புத்தகத்தின் மீதான ஆர்வம் பல அவசியமான விடயங்களிலேயே எம்மை ஈடுபடுத்தும்.

**சிறந்த நண்பர்களுடன் பழகுதல் --** நாம் மனம் விட்டு பேசக்கூடிய உறவுதான் நண்பர்கள். அவர்களிடம் நாம் எமது மனதில் உள்ளவற்றை வெளிப்படையாக பேசும் பொழுது எமது மனதின் பாரம் குறைந்து அவசியமற்ற யோசனை உண்டாகாது.

*"அதிகப்படியான யோசனையை தவிர்த்து முன்னோக்கி செல்லும் வாழ்க்கை என்றும் சந்தோஷமே!"*

**- இரா சஹானா**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1013



## தாழையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்
### சாவகச்சேரி

" வாழும் படியொன்றும் படியொன்றும் கண்டுகொண்டடன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டதமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே."

தன்னைச்சரணடையும் பக்தர்களுக்கு அபயமளித்துக் காப்பாற்றுபவளாகத் துர்க்கையைத் தமிழ் மக்கள் போற்றி வணங்குகின்றனர். தாழையம்பதி ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. ஏறக்குறைய 1805 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது. இவ்வாலயத்திலே எழுந்தருளியுள்ள அன்னை, கைக-ளிலே சங்கு சக்கரம், அபயவரதம் என்பவற்றுடன் பாதத்தில் மகிடன் தலையைக்கொண்ட மகிஷாசுரமர்த்தனியாகவும், விஷ்ணுதுர்க்கையாகவும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

ஆதிகாலத்திலிருந்து இவ்வாலயத்தில் அம்பிகையைப் பஞ்சலோகத்தினாலான விக்கிரகமாக மூலாலயத்தில் நிறுவி வழிபட்டுள்ளார்கள். பின்னர் இந்தியாவில் சிதம்பரத்திலிருந்து தருவிக்கப்பட்ட அழகுறு சிலாவிக்கிரகம், 1956 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றுள்ளது. தாழையம்பதியில் எழுந்தருளியுள்ள துர்க்கை அம்பாள், சகல வல்லமை கொண்டவளாக, வேண்டிய வரங்களைக் கொடுப்பவளாக அற்புதங்கள் புரியும் நாயகியாக விளங்குகின்றாள்.

சர்வ வல்லமைகொண்ட பராசக்தியைத் துர்க்கை என சப்தரிஷிகள் வழிபட்டுள்ளனர். புராணங்களிலே துர்க்கையின் சிறப்பு, பலவிடங்களிலே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. சிவனை மதியாது பார்வதியாரின் தந்தையாகிய தக்கன் செய்யும் யாகத்தில் கலந்துகொள்ள, அன்னை பராசக்தி விரும்பினாள். அதற்கு முழுமுதற் கடவுளாகிய சிவன் அனுமதி கொடுக்கவில்லை. பார்வதி சினங்கொண்டு மகா-காளி வேடந்தாங்கினார். இத்தோற்றத்தைக்கண்டு சிவன் அஞ்சினார். அப்போது எட்டுத் திசைகள், பூமி, ஆகாசம் என்று பத்துத் திக்குகளிலும் பத்துவிதமான ரூபங்களை எடுத்து அன்னை காட்சி கொடுத்தார். இவ்வாறாக அமைந்த அம்மையின் ஒன்று சேர்ந்த மூர்த்தமே துர்க்கையாகும்.

சாந்தமடைந்த அம்பிகை சிவனிடம் தமது சக்திகளைப்பற்றிக் கூறுகையில், பக்தர்களுக்கு அருள் புரியவும், சரணடைந்தோரை உய்விக்கவும், சாதனை மூலம் உபாசனை செய்வோருக்கு அவர்களது இஷ்ட சித்திகளை வழங்கவும், உற்சவங்கள், ஆராதனைகள், அர்ச்சனைகள் புரிவோருக்கு அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே இத்தோற்றமெடுத்தேன் எனக் கூறி மறைந்தருளினார். அன்னையின் இப்பத்துத் தோற்றங்களும் தசகமஹாவித்தை என அழைக்கப்படுகின்றது.

முருகப்பெருமானின் அவதாரத்திற்கு, சிவபிரான் இந்தத் தசகமஹாவித்தையாக உருக்கொண்ட துர்க்கையை நினைத்தபோது, பஞ்சமுகத்தோடு அதோர் முகத்துத் தீயும் தோன்றியதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. இக்காரணத்தினாலேயே துர்க்கையை முருகப்பெருமானின் அன்னை எனக் கூறுவது வழக்கம். மகிஷாசுர வதத்தில் முருகனை மகனே என்று அழைப்பதும், முருகன் அம்மா என்று அழைப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அதியற்புதத் தோற்றப்பாடுடைய துர்க்கை அம்பாளை தாழையம்பதி மக்கள் போற்றி வணங்கி வருகின்றனர். தாழையம்பதி துர்க்கை அம்மன் ஆலய தலவிருட்சமாக தாழைமரம் விளங்குகின்றது. ஆலயத்தின் தென்கிழக்குப்பபகுதி முழுவதும் தாழைமரங்களால் சூழ்ந்து காணப்படுகின்றது. இத்தாழை மரங்கள் விசேடமானவையாகக் கருதப்படுகின்றன. காரணம், வருடம் முழுவதும் பூத்திருக்கும் இத் தாழை மரங்கள் காய்ப்பது கிடையாது. அவ்வாறே இவற்றுள் பாம்புகள் காணப்பட்டாலும் அவை எவருக்கும் தொந்தரவு கொடுப்பதில்லை என்று இவ்வூர் மக்கள் கூறிப் பெருமிதம் அடைவர்.

இவ்வூர்ப்பெரியவர்கள் அன்னையின் அற்புதங்களை வாய்மொழிக்கதையாகக் கூறி மகிழ்வர். தாழையம்பதி அம்பிகை, தாழை மரங்களுக்கிடையே ஓர் கிழவியாக நடமாடிக்கொண்டிருப்பதாகவும் இப்பெரியவர்கள் கூறிழ மகிழ்வர். இக்காரணத்தினால் தாழையம்பதி துர்க்கையம்மனைப் பல பெயர் கொண்டு அழைப்பர். தாழையடி அம்மன், தாழையம்பதி துர்க்கையம்மன் என்றெல்லாம் அம்பிகையைப் போற்றி மகிழ்வர். ஆலயத்தின் பின்புறமாக மட்டுவிலிலிருந்து நுணா-விலூடாகச் சாவகச்சேரி வரையுள்ள தெருவை, தாழையம்பதி வீதியென அழைப்பார்கள்.

*வளரும்...*




TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# அன்பின் தொனி - 661

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

*அன்பானவர்களே!*

கடவுள் படைத்த வெள்ளியையும் பொன்னையும், மரத்தையும் கல்லையும் மனிதன் தன் சுய சிந்தனையினால் தன் விருப்பப்படி பற்பல உருவங்களையும் சுருபங்களையும், சிலைகளையும், விக்கிரகங்களாக உருவாக்கி தெய்வங்களாக வணங்கிவருவதை உலகத்தில் உள்ள சகல தேசங்களிலும் இன்றுவரை காணக்கூடியதாய் இருக்கிறது. பூமியிலுள்ள மனிதன் விண்ணிலுள்ள சந்திர மண்டலத்தில் கால்வைத்து நடக்கிற அளவிற்கு விஞ்ஞான அறிவு விருத்தியடைந்த போதிலும், மண்ணிலுள்ள வெள்ளி, பொன், மரம், கல் இவைகளை தெய்வங்களாய் உருவாக்கி வணங்குவது எவ்வ ளவு அறிவற்ற செயல் என்பதை உணர முடியாதவாறு அவர்களுடைய ஆன்மீகக் கண்கள் மூடப்பட்டிருக்கிறது. **ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை, அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை.**

விக்கிரக தேவர்களின் பெயர்கள் - **Names of Idols**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்த்து தேசத்தில் அடிமைத்தனத்தில் இருந்தபோது கர்த்தராகிய தேவன் பெரிதான அற்புத அதிசய அடையாளங்களைச் செய்து அவர்களைப் பார்வோன் ராஜாவின் பிடியிலிருந்து விடுவித்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு கொண்டு சேர்த்தார். இத்தனை மகத்தான காரியங்களைக் கண்டும் அந்த ஜனங்கள், தங்களைக் கண்மணிபோல் காத்த தேவனை மறந்து, பல் வேறான தெய்வங்களை உண்டாக்கி உருவாக்கி, வெவ்வேறு பெயர்கொடுத்து அவை-களை வணங்கிவந்தனர். அது மட்டுமல்லாமல், அவர்களைச் சுற்றியுமிருந்த அன்னிய மக்களோடு உறவுகொண்டு அவர்களுடைய தேவர்களையும் வணங்கி வந்தனர். அப்படியாக அன்று அவர்கள் ஆராதித்து வணங்கிய விக்கிரக தேவர்களின் பெயர்களை, பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கயில் இருந்து, கீழே சம்பத்தப்பட்ட வேத வசனத்தோடு தந்திருப்பதை வாசித்து அறியுங்கள்:

1. மோளேகு **– Molech**

நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே, உன் தேவனுடைய நாமத் தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே, நான் கர்த்தர்.- **லேவியராகமம் 18: 21**

அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம் மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான்.- **1 ராஜாக்கள் 11: 7**

அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமு டைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள், யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணு வதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.- **எரேமியா 32: 35**

நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திரராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டுவந்தீர்களே.- **ஆமோஸ் 5: 26**

பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகி-னுடைய கூடாரத்தையும், உங்கள் தேவ னாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே, ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்பு றத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே.- **அப்போஸ்தலர் 7: 43 2.**

பாகால் - **Baal**

மறுநாள் காலமே பாலாக் பிலேயாமைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பா-காலுடைய மேடுகளில் ஏறப்பண்ணினான், அவ்விடத்திலிருந்து பிலேயாம் ஜனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்த்தான்.- *எண்ணாகமம் 22: 41*

உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப் பானதைச் செய்தான்.

தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான். *– 1 ராஜாக்கள் 16: 30, 32*

நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி, பிற்பாடு வந்து, என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று: இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ? - *எரேமியா 7: 9-10*

தனக்கு நான் தானியத்தையும் திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுத்தவரென்றும், தனக்கு நான் வெள்ளியை யும் பொன்னையும் பெருகப்பண்ணினவரென்றும் அவள் அறியாமற் போனாள், அவைகளை அவர்கள் பாகாலுடைய தாக்கினார்கள்.- *ஓசியா 2: 8*

கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார் கள், நான் (எலியா) ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ர வேலருக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணினபோது, அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே. – *ரோமர் 11: 3-4*

(தொடரும்)

ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

தமிழ், சமய, பண்ணிசை
வகுப்புக்கள் 11.09.2022 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த பதினாறு வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது. தரமான ஆசிரியர்களைக் கொண்டு கல்விகற்பிப்பதுடன், ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி, வருடாந்த மஹோற்சவம் போன்றதினங்களில் தேவார திருமுறைகளைப் பண்ணோடு படித்தல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரம்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவிப்பது போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

புதிய மாணவர்களுக்குரிய பதிவுகள் நடைபெறுகின்றது.

Apply now at www.varasiththi.com

தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை

இந்துக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் 4 வயது (Junior Kindergarten) முதல் 8 வயது (2 ம் வகுப்பு) வரையிலான புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU COLLEGE
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500 www.varasiththi.com

# இந்திய ஆய்வியல் துறை ஆதரவில் பாதாசனின் 'தலையங்க கவிதைகள்' நூல் வெளியீடு

## முதல் பிரதியை டத்தோ சகாதேவன் பெற்றார்



நக்கீரன்



கோலாலம்பூர், செப்.02: மலேசியத் தமிழ் இலக்கிய வட்டத்தின் பாரம்பரிய மரபுக் கவிஞர்களில் ஒருவரான பாதாசனின் "தலையங்க கவிதைகள்" என்னும் நூல், மலாயாப் பல்கலைக்கழக டி.கே.எ.்.ப். மண்டபத்தில் அண்மையில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்திய ஆய்வியல் துறை ஏற்பாட்டு ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் முத்தாய்ப்பு அங்கமான நூல் வெளியீட்டின்போது, தேசிய நில நிதி கூட்டுறவு சங்க நிருவாக இயக்குநரும் செயலாளருமான டத்தோ பா.சகாதேவன் அவர்கள் முதல் நூலைப் பெற்றார்.

கல்வியாளர் பி.எம். மூர்த்தியின் வரவேற்புரையுடன் தொடங்கிய இந்த நூல் வெளியீட்டு விழாவில், காவல் துறை ஓய்வுபெற்ற அதிகாரி டத்தோஸ்ரீ தெய்வீகன், வள்ளல் பா.சகாதேவன், உமா பதிப்பகத்தின் டத்தோ ஆ.சோதிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அதனைத் தொடர்ந்து இந்திய ஆய்வியல் துறைத் தலைவர் முனைவர் மணிமாறன் நூலாய்வுரை வழங்கினார்.



நாளேட்டில் தலையங்கம் தீட்டி வந்த பாதாசன், நாளேட்டுப் பணியில் இருந்து ஓய்வுபெற்றபின், அதே வீச்சுடன் தலையங்கச் செய்திகளை கவிதைகளாக இயற்றி வந்தார்.

அரசியல், கல்வி, பொருளாதாரம் உட்பட அனைத்துத் துறைகளையும் சார்ந்து நல்ல அம்சங்களைப் பாராட்டியும் நன்றல்லனவற்றை இடைத்துரைத்தும் புனையப்பட்ட கவிதைகள் தொகுக்கப்பட்டு, "தலையங்க கவிதைகள்" என்னும் பெயரில் வெளியிடப்படுவதாகக் குறிப்பிட்ட முனைவர் மணிமாறன், அனைத்துத் தரப்பினரும் படிக்க வேண்டிய நூல் இது என்றார்.

நிறைவாக, மனித வள அமைச்சர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் சிறப்புரை ஆற்றி நூலை அறிமுகம் செய்தார்.

ஒரு நூலை வாசிக்கும்பொழுது அந்த நூல் ஒருவரின் சிந்தனையைக் கிளர வேண்டும். அதன் மூலம் உயர்வான எண்ணங்கள் தோன்றி, அந்த எண்ணங்கள் நல்ல செயல்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்க வேண்டும் என்று தானாற்றிய தலைமையுரையில் சரவணன் சொன்னார்.

இப்போதெல்லாம் சமூக வளைதல ஊடகங்களில் வன்முறை அதிகரித்துள்ளது. இந்தப் போக்கு நீடித்தால், நல்லவர்களும் படித்தவர்களும் பொதுவாழ்க்கையில் இருந்து ஒதுங்கிக் கொள்வார்கள் என்று சரவணன் தன் ஆதங்கத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து நூலை வெளியீடு செய்தபோது, டத்தோ சகாதேவனை அடுத்து 2-ஆவது நூலினை டத்தோஸ்ரீ தெய்வீகனும் அடுத்ததாக டத்தோ சோதிநாதனும் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்ட தொகையை வழங்கி நூல்களைப் பெற்றுச் சென்றனர்.

பேராசிரியர் டத்தோ என்.எஸ். இராஜேந்திரன், டான்ஸ்ரீ மாரிமுத்து, முனைவர் எம். இராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமான கல்வியாளர்கள், மாணவர்கள், பொது இயக்கத்தினர், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, பாதாசனின் நண்பர் கவிஞர் "பாத்தேறல்" இளமாறன் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்தார்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**



MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு


MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York




## 24 உயிர் உலா

கொரோனா என்னும் கொடிய வைரஸ் உலகம் முழுவதையும் பெருமளவு பாதித்துக் கொண்டிருந்த காலம். பெரும் எண்ணிக்கையில் பல்வேறு நாடுகளிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

எந்தவிதமான மருந்துகளும் கண்டுபிடிக்கப்படாமையால் வைரஸ்ஸிலிருந்து உயிரை காப்பது முதன்மையானதாக மாறியது. இதயமே, நீ ஓரளவுக்கு அமைதியாகவே இயங்கிக்கொண்டிருந்தாய். ஆனால் அந்த அமைதி நீடிக்கவில்லை.

2020 வைகாசி 17 ஒரு மாலை வேளை. கொரோனா காரணமாக வீட்டுக்குள் முடங்கி இருந்த நான் சற்று ஆறுதலுக்காக வீட்டைச் சுற்றி வெளியில் கொஞ்சத் தூரம் நடக்கலாம் என்று துணைவியாருடன் சேர்ந்து நடந்து கொண்டிருந்தேன்.

மிகவும் ஆறுதலாகவே நடந்து கொண்டிருந்த வேளையில் என் நெஞ்சுக்குள் வித்தியாசம் தெரிந்தது. சில கணப்பொழுதில் இதயமே, நீ தாளம் பிசகி வேகமாக அடிக்கத் தொடங்கினாய். நான் அப்படியே புல்தரையில் மெதுவாக இருந்தேன். ICD மின்னலைகளை அனுப்பி சரி செய்தது.

முழுமையான மின்னதிர்ச்சிக்கு (Complete Electrical Shock) போகாமல் இருக்கவேண்டும் என்பதையே மனம் நினைத்தது. உடனும் அம்புலன்ஸ்க்கு அழைத்து பிராம்டன் மருத்துவ நிலையத்துக்குச் சென்று இரண்டு நாட்கள் தங்க நேர்ந்தது.

சிலநாட்களின் பின் மற்றும் ஒரு நாள் இதே நிலைமை. அதுவும் வீட்டின் அயலில் நடந்து போனபோது இது போன்று ஏற்பட்டதுதான். மகளுக்குத் தொலைபேசியில் துணைவியார் தெரியப்படுத்தனார். மூன்று நான்கு நிமிடங்களுக்குள் மகள் காரில் வந்துவிட்டா.

இதயத்துடிப்பையும் இதய அழுத்தத்தையும் பார்த்தா. உடனும் அம்புலன்சுக்கு தெரியப்படுத்தினா. பக்கத்திலே வீடு என்பதால் மெதுவாக காரில் ஏறி வீடு சென்று வீட்டுக்குள் சாய்வாக - ஓய்வாக சோபாவில் இருந்தேன். இதயமே உனக்கு அதிகம் வேலை கொடுக்கக் கூடாது என்பதில் நான் மிகவும் கவனமாகவே இருந்தேன். இதயமே நீ இப்போது தொட்டாச்சுருங்கிச் செடிபோல ஆகிவிட்டாயே என்ற பயம் உள்ளூர இருந்தது.

ஒரு பத்து நிமிடங்களுக்குள் அம்புலன்ஸ் வந்தது. வந்த துணை மருத்துவர்கள் (Paramedics) வழமைபோல எனது உடல் நிலை - நோய்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அதேவேளை இரத்த அழுத்தம் (Blood Pressure), இதயத் துடிப்பு (Heart Beat), பிராண வாயுவின் அளவு (Oxygen Level) இவற்றைப் பரிசோதித்து குறித்துக் கொண்டார்கள். அன்றைய கொரோனாத் தொற்றுச் சூழலில் அடிக்கடி வைத்தியசாலைக்குப் போவதைத் தவிர்ப்பதே நல்லது என்ற எண்ணம் என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நேரம் இதயமே நீ சாதாரண நிலைக்கு திரும்பிவிட்டாய் என்ற உணர்வே ஏற்பட்டது.

அதனால் "நான் இப்போது ஓ.கே. நான் இனி வைத்தியசாலைக்கு வரத்தேவையில்லை. நீங்கள் போகலாம்" என்று அவர்களிடம் சொன்னேன். வீட்டில் எல்லோரும் "வைத்தியசாலைக்குப் போவதுதான் நல்லது றிஸ்க் (Risk) எடுக்க வேண்டாம்" என்று எச்சரித்தார்கள். துணை மருத்துவர்களும் அதையே சொன்னார்கள். "நான் இப்போது சாதாரண நிலைக்கு வந்துவிட்டேன் பயப்படக்கூடியதாகத் தெரியவில்லை" என்று மீண்டும் அவர்களுக்குச் சொன்னேன். "சரி இன்னும் கொஞ்ச நேரம் நாங்கள் பொறுத்துப் பார்க்கிறோம். அதன் பின்னர் நீங்கள் முடிவெடுங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள்.

சிறிது நேரம் பொறுத்து "என்னமாதிரி" என்று துணை மருத்துவர்கள் கேட்டார்கள். எனது பேத்திமார் மூவரும் சிலதைப் புரிந்தும் பலதைப் புரியாமலும் ஒரு பதட்டத்தோடு அங்கிருந்தார்கள். நான் இப்போது அவர்களைக் காட்டி அவர்கள்தான் எங்கள் சந்தோஷமும் மருந்தும் என்று பகிடியாகச் சொல்லியபடி "இப்ப எல்லாம் சரி. நீங்கள் போய்வாருங்கள். உங்களுக்கு நன்றி" என்று மிகுந்த நம்பிக்கையோடு சொன்னேன். "அப்படியென்றால் இதில் கையொப்பம் இட்டுத் தாருங்கள்" என்று ஒரு பத்திரத்தை அவர்கள் நீட்டினார்கள். நானும் கையொப்பம் இடத் தயாரானேன்.

எட, என் இதயமே நீ உன் குணத்தைக் காட்டத் தொடங்கிவிட்டாய். சுருண்டுகிடந்த விஷப்பாம்பாய் சீறி எழுந்தாய். உன்வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. ICD இரண்டு மூன்று தடவைகள் மின்னலைகளை வழங்கி (Pacing) உன்னைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றதை நான் உணர்ந்தேன். "வைத்தியசாலைக்குப் போவோம்" என்று அந்த வலியோடு சொன்னேன்.

பிறகென்ன அன்றிரவு முழுதும் வைத்தியசாலையில் வழமையான பரிசோதனைகளுடன் சிறையிடப்பட்டேன். சிறுநீர் கழிப்பதிலும் உபாதைகள் இருந்தன. அங்கு கடமையில் இருந்தவரை அழைத்து "நான் கழிப்பறைக்கு அவசரமாகப் போக வேண்டும்" என்றேன். அவர் "நீங்கள் படுக்கையை விட்டு எழும்பக்கூடாது" என்று கட்டளை இட்டுவிட்டு அதற்குரிய பாத்திரத்தைத் தந்தார். அப்பாடா! ஒருமாதிரி பாரத்தை இறக்கினேன். கொஞ்ச நேரம் கழித்து அவர் வந்து "பரிசோதனைக்கு சிறுநீர் வேண்டும்" என்கிறார். 'சிறுநீருக்கு நான் இனி எங்கு போவேன்' என்ற நிலை. "ஏன் நீர் முதலில் சொல்லவில்லை?" என்று அவரை நான் கேட்டேன்.

"அப்பிடி என்றால் குழாயை Tube உள்ளே விட்டு (Urinary Catheter) எடுப்பம்" என்று ஏதோ கிணற்றிலை இருந்து மோட்டார் பம்ப் இல் தண்ணி இறைக்கிற மாதிரி அவர் சொல்ல, "நான் அந்த வேலை வேண்டாம். இருக்கிற பிரச்சினையள் போதாதென்று அதனால் தொற்று ஏதும் வந்தால் அது வேறை பிரச்சினை... நீர் இந்த வயறுகளைக் கழற்றிப்போட்டு தயவு செய்து என்னைக் கழிவறைக்கு விடுங்கோ" என்று கெஞ்சிக் கேட்டு ஒருமாதிரி கழிவறைக்குள் சென்று பூட்டிவிட்டு பல்வேறு பிரயத்தனங்களோடு சிறுநீரை எடுத்து அந்தச் சிறிய போத்தலில் காற்பங்கை நிரப்ப அரை மணிநேரம் எடுத்து வெற்றி கண்டேன். அதற்கிடையில் வெளியில் இருந்து தாதிமார் "ஆ யு ஓகே? ஆ யு ஓகே? எனி ஹெல்ப்?" "Are you OK? Are you OK? any help?" என்று பலதடவை கேட்டுவிட்டு சென்றனர்.

மறுநாளும் மேலும் பல சோதனைகள். 'சோதனைமேல் சோதனை போதுமடா சாமி' என்று மறு நாள் பகலில் வீடு திரும்பினேன். பேத்திமார் ஓடிவந்தாலும் அவர்களைத் தழுவவில்லை.

தனியறையில் என் தனிமைப்படுத்தல் தொடர்ந்தது.

மருத்துவர்களால் புதிதாக எதையும் செய்ய முடியாது. சாதாரணமாக நடக்கும்போதே இப்படி பிரச்சினை ஏற்படுவது அதிக கவலையைத் தந்தது. இப்போது காலாற கொஞ்ச நேரம் நடப்பது என்பதும் பிரச்சினையாகிவிட்டது. நடப்பது பயமாகவும் இருந்தது. பின்னேரப் பொழுதுகளில் ஒரு மாற்றத்துக்காக எமது குடியிருப்பின் சுற்றுப் புறங்களுக்கு நானும் துணைவியாரும் காரில் செல்வதை வழமையாக்கினோம்.

அதுவும் எனக்குப் பிரச்சினையைத் தரும் என்பதை நான் கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை. டிம் ஹோர்ட்டன் ட்ரறைவ் த்றூவில் (Tim Horton Drive Through) இரண்டு தேநீரை வாங்கிக் கொண்டு கொஞ்சம் தேநீரை அருந்தியபடி சற்று அண்மையில் வாகனத்தைச் செலுத்தியபோது என் வயிற்றுக்குள்ளிருந்து ஓர் அலை மேலெழுவதுபோல அந்த வித்தியாசம் உருவானது. தேநீரில் இருக்கும் கவ்வீன் (Caffeine) அதிகம் அருந்துவது இதயத்தின் வேகத்துடிப்புக்கு உகந்ததல்ல என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும்.

மெதுவாக வாகனத்தை ஓரமாக நிறுத்தியபோது அதற்குள் இதயமே உனது பிரச்சினை நடந்தேறிவிட்டது. "எனக்கு ஒருவிதமாக இருக்கிறது. கொஞ்சம் பொறுப்போம்" என்று மட்டும் அருகில் இருந்த மனைவியிடம் சொன்னேன். ICD மின்னலைகளை வழங்கி சரி செய்திருந்தாலும் இதயமே, நீ இன்னும் ஒரு நிதானத்தில் இல்லாமல் இருப்பதையும் உணர முடிந்தது.

வீட்டுக்கு மகளிடம் தகவல் சொன்னோம். இப்போது வீதி ஓரத்திலே நிற்பதா அல்லது மெதுவாக அவசர சைகை விளக்கை (Emergency Lights) போட்டுக் கொண்டு வீட்டுக்கு வாகனத்தை மெதுவாக செலுத்தி போய்ச் சேருவதா என்ற கேள்வி. வாகனத்தை மெதுவாகச் செலுத்தி வீட்டுக்கு வந்து சேர்வதையே எனது புத்தி சொன்னது.

ஆனால் அது மிகவும் ஆபத்தான ஒரு முடிவென்பதை யாரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். உண்மையில் வீதி ஓரத்தில் நின்று கொண்டே 911ஐ - அம்புலன்சை நாங்கள் அழைத்திருந்திருக்க வேண்டும். அதுவே சரியாக இருந்திருக்கும்.

புத்தி எல்லா நேரங்களிலும் சரியாக வேலை செய்வதில்லை.

அது கொரோனாத் தொற்று நோயாளிகள் தொகை தொகையாக வைத்தியசாலையில் குவிந்து கொண்டும், வகை தொகை இல்லாமல் இறந்துகொண்டும் இருந்த நேரம். அதனால் சாதாரண நோயாளிகள் பலரும் வைத்தியசாலைக்குச் செல்லப் பயந்து கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் இதயப் பிரச்சினைக்காகப் போய் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி உயிரிழக்க வேண்டாம்? என்ற எச்சரிக்கையும் எனக்கிருந்தது. உடனும் 911 அழைக்காமல் பின்வாங்கியதற்கு இதுவும் ஒரு காரணம் என்றே சொல்ல வேண்டும்.

மகள் கைக்குழந்தையுடன் வருவதில் உள்ள சிரமத்தை நினைத்துக் கொண்டு மெது மெதுவாக வாகனத்தைச் செலுத்தியபடி வீட்டு வாசலுக்கு வந்து சேரவும் மகள் ஸ்டெதஸ்கோப்புடன் ஓடி வந்தா. இப்போது என்னால் கொஞ்சமும் இயங்க முடியாமல் இருந்தது. மூச்சுத் திணறியது. கையில் நாடித் துடிப்பைப் பார்த்த மகள் பயந்து 'அப்பா என்று அழுதார். எனது மோசமான நிலையை அவர் அறிந்திருந்தார்.

இதயமே, நீ கட்டுக்கடங்காமல் துடிப்பில் வேகம் காட்டினாய். ICD மின்னலைகளாலும் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாமல் இருந்தது. இதற்கிடையில் அம்புலன்சும் வந்துவிட்டது. அவர்களது கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது எனக்கு முடியாமல் இருந்தது.

காரிருக்கையில் இருந்து என்னை எழுந்து வர கேட்டபோது நான், 'முடியவில்லை கொஞ்ச நேரம் பொறுங்கள்' என்றும் சைகையால் சொன்னேன். இந்த நேரம் இதயமே உனக்கு மிகச் சிறிய அளவிலேனும் சுமையைக் கொடுப்பது மேலும் ஆபத்தாக முடியலாம் என்பதை நான் உணர்ந்திருந்தேன்.

அம்புலன்சில் ஏற்றிய போதும் வேகத்துடிப்பு (Pulpitation) தொடர்ச்சி யாக நடந்தது. ப்ராம்ப்டன் மருத்துவ நிலையத்தின் அவசர சிகிச்சைப் பிரிவில் கொண்டுபோய் சேர்த்தபோதும் தொடர்ச்சியாக தாளம் தப்பிய இதயத் துடிப்புகள் அலை அலையாக வந்தன. அறித்மியா ஸ்ரோம் (Arrythmia Strom) என்பது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அதுவே இப்போதும் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இப்படி அடிக்கடி பிரச்சினை வந்தபோது இதயமே, உனது குழாயில் அடைப்புக்கள் மீண்டும் ஏற்பட்டிருக்கலாம் என்றொரு சந்தேகம் இருந்து கொண்டே இருந்தது.

மகளும் இதுபற்றி என்னுடன் கலந்துரையாடி இருந்தார். அதுபற்றிய பரிசோதனைக்கு ஈடுபடுத்துவதில் பயந்து ஓரளவு பின்னின்றதற்கான காரணம் Arrythmia பிரச்சினையே. சத்திரசிகிச்சைக்கு உட்படும்போது பெரிய பிரச்சினைகள் வரவும் சந்தர்ப்பம் இருக்கும் என்பதுவே அந்தப் பயம் ஆகும்.

ஆனாலும் இதய நிபுணர்கள் பலரும் இதய அடைப்பும் ஒரு காரணமாய் இருக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டதன் பேரில் அத்தகைய பரிசோதனை செய்வதற்கு மருத்துவ நிலையத்தில் தங்கி இருந்த இந்தத் தருணத்தில் நான் உடன்பட்டேன்.

அத்தகைய பரிசோதனை செய்வதற்கு இரண்டாவது நாள் எனக்கு நேரம் குறித்து ஒதுக்கப்பட்டது.



# இனவாதக் கட்சியாக உருமாற்றம் கண்டுள்ள பாஸ் தேசிய அரசியலுக்கு கடும் மருட்டல்:



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஆக.30:

21-ஆம் நூற்றாண்டு பிறந்து கால் நூற்றாண்டை நெருங்கும் இந்த வேளையில் உலகில் பெரும்பாலான நாடுகள் வலச்சாரி அரசியலை முன்னெடுக்கின்றன. மலேசியாவும் அந்தப் பாதையில் பயணிக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பாஸ் கட்சியும் அம்னோவும் முன்னெடுக்கும் அரசியல் இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளான அமெரிக்காவிலும் இந்தியா-விலும் வலச்சாரி அரசியல் ஆழ வேரூன்றிவிட்டன. தற்பொழுது உலக அளவில் சக்திமிக்க வலச்சாரி தலைவர்களாக விளங்குபவர்கள் இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியின் நரேந்திர மோடி, அமெரிக்காவில் குடியரசுக் கட்சியின் டோனல்ட் டிரம்ப், தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேசில் நாட்டின் போல்சனாரோ, மலேசியாவில் பெஜுவாங் கட்சியின் தலைவர் துன் மகாதீர் ஆகியோர். இவர்களுடன், பாஸ் கட்சியின் டான்ஸ்ரீ அப்துல் ஹடி அவாங்கும் இப்போது இணைகிறார்.

மலாயா சுதந்திரம் அடைந்தபொழுது கேடிஎம் உள்ளிட்ட அரசுப் பணிகளில் ஏறக்குறைய 40% ஆக இருந்த தமிழர்கள்-யாழ்ப்பான தமிழர்கள்-மலையாளிகள் உள்ளிட்ட இந்தியர்களின் எண்ணிக்கை துன் ரசாக் காலத்தில் சரிவடையத் தொடங்கி, துன் மகாதீரின் 22 ஆண்டு கால ஆட்சியில் 4% என்ற அளவில் படுபாதாள நிலைக்குச் சென்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஜெர்மனி, ஸ்பெயின், பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் வலதுசாரி கொள்கையுடைய கட்சிகள் வலுவாக ஆதிக்கம் செலுத்துகின்றன. பிரான்ஸ் நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலில்கூட இரண்டாவது தவணையாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் இமானுவேல் மெக்ரோன், தன்னை எதிர்த்து போட்டியிட்ட மரியென் லூ பென்னிடம் இருந்து கடுமையான சவாலை எதிர்கொண்டு தட்டுத் தடுமாறிதான் கரை சேர்ந்தார். மரியென் லூ கடுமையான வலச்சாரி போக்கு கொண்டவர்.




அதைப்போல ஆஸ்திரியாவின் சுதந்திரக் கட்சி, பிரான்ஸ் நாட்டின் தேசிய முன்னணி, ஸ்கெண்டிநேவிய தீபகற்கத்தைச் சேர்ந்த நோர்வே நாட்டின் முன்னேற்றக் கட்சி, ஸ்விட்சர்லாந்தின் மக்கள் கட்சி ஆகியவையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் செல்வாக்கு பெற்ற வலச்சாரி கட்சிகளாக வளர்ந்து வருகின்றன.

வலச்சாரி சிந்தனை அல்லது வலச்சாரி கட்சி என்றால் என்ன?

மதத்தின் அடிப்படையிலும் இனத்தின் அடிப்படையிலும் சிந்தித்து செயல்-படுவதுதான் வலச்சாரி பார்வை எல்லார்க்கும் எல்லாமும் என்பது ஜனநாயக சிந்தனை அல்லது இடதுசாரிப் பார்வை.

மூன்று நாட்களுக்கு முன்னம், பொதுச் சாலையில் ஓர் இந்திய வம்சாவளிப் பெண்ணிடம் ஓர் அமெரிக்கப்பெண் உன்னுடைய நாட்டுக்கு திரும்பிப் போ என்று மூர்க்கத்தனமாக பேசி, மல்லுக்கு நின்றதை வலதுசாரி நடவடிக்கைக்கு சான்றாகக் கொள்ளலாம்.

மகாதீரின் அண்மைய 22 மாத ஆட்சியில் தாய்மொழிப் பள்ளிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததும் அந்த வகையைச் சேர்ந்ததுதான்.



இவற்றை யெல்லாம்விட மிகவும் சரியாக சொல்லாக வேண்டுமெனில், மலேசியாவில் நிலவும் லஞ்ச-ஊழலுக்கு ஊற்றுக்கண்ணாக இருப்பவர்கள் மலாய்க்காரர் அல்லாதவர்களும் இஸ்லாம் அல்லாதவர்களும் என்று பாஸ் கட்சியின் தலைவர் டான்ஸ்ரீ ஹடி அவாங் சொன்னக் கருத்தை, இனவெறுப்பு அரசியலுக்கும் வலதுசாரி சிந்தனைக்கும் பொருத்தமான சான்றாகக் கருதலாம்.

டத்தோஸ்ரீ நஜீப் காலத்தில், பாஸ் கட்சியின் வங்கிக் கணக்கில் 25 லட்சம் இரகசியமாக வந்து சேர்ந்ததே, அதற்கு இதுவரை நாட்டு மக்களிடம் விளக்கம் சொல்லாத ஹடி அவாங், தற்பொழுது அரசியலில் மதத்தையும் இனத்தையும் கலந்து இந்த நாட்டில் நிலவும் சமய நல்லிணக்கத்திற்கும் இன இணக்கத்திற்கும் வேட்டு வைப்பதைப் போல முரட்டுத்தனமாக பேசி இருக்கிறார்.



உண்மையில் பாஸ் கட்சியின் தொடக்கம், “அனைவருக்கும் அனைத்தும்” என்ற இடதுசாரி கொள்கையுடன்தான் உருவானது. 2-ஆம் உலகப் போர் முடிவுபெற்ற நேரம் அது மலாயா விடுதலைப் பெறுவதற்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன் 1945-ஆண்டு காலக்கட்டத்தில் இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் எல்லாம் கூட்டுசேர்ந்து மலாய் தேசியவாத கட்சியை உருவாக்கின. இந்தக் கட்சிதான் அடுத்த ஆறு ஆண்டுகளில் உருமாற்றம் அடைந்து 1951, நவம்பர் 24-இல் பாஸ் என்னும் முழுமையான இஸ்லாமிய அரசியல் கட்சி உருவானது. அப்பொழுதும் அதன் அரசியல் கொள்கை இடதுசாரித் தன்மை கொண்டதாகத்தான் இருந்தது.

காலவோட்டத்தில், அதன் அரசியல் கொள்கை மத-இன அடிப்படையிலான வலதுசாரி தன்மைக்குத் திரும்பியது. குறிப்பாக, ஹுடுட் சட்டம் போன்ற இஸ்லாமிய சட்டத்தின்படி நாட்டின் நீதிபரிபாலனம் நடைபெற வேண்டும் என்ற சிந்தனையை வலிந்து முன்னெடுத்த மதவாதக் கட்சியாக பாஸ் விளங்கி வந்தது.

2013, மே 5-இல் நடைபெற்ற நாட்டின் 13-ஆவது பொதுத் தேர்தல் சமயத்திலேயே “பக்கத்தான் ராயாட்” என்னும் மக்கள் கூட்டணி மத்திய ஆட்சியைப் பிடித்திருக்கும். அந்தத் தேர்தலில் மக்கள் கூட்டணியில் இடம்பெற்றிருந்த பிகேஆர், ஜசெக கட்சிகள் வென்ற அளவுக்கு பாதி அளவுக்குகூட பாஸ் வெல்ல முடியாமல் போனது அந்த நேரத்தில் ஹுடுட் சட்ட அமலாக்கம் குறித்து அதிகமாக பேசியது பாஸ். இல்லாவிட்டால், அப்பொழுதே நாட்டில் அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கும்.

அந்தத் தேர்தலில் பலத்த அடி வாங்கியபின் பாஸ் கட்சி ஹுடுட் சட்டத்தைப் பற்றி அதிகம் பேசாமல் இருந்தது. அதற்கு வட்டியும் முதலுமாக இப்பொழுது இனவாத அரசியலையும் ஜனநாயக விரோதப் போக்கையும் பாஸ் கட்சி மேற்கொண்டு, புத்ராஜெயா அரசியலில் சண்டித்தனம் புரிகிறது.

மலேசியாவின் மூத்த அரசியல் இயக்கமான பாஸ் கட்சிக்கென்று சில வரலாற்றுப் பெருமைகள் உண்டு. இரண்டு மாநிலங்களில் தனித்து ஆட்சி அமைத்துள்ள ஒரேக் கட்சி நாட்டில் பாஸ் கட்சி மட்டும்தான் கெடா மாநில சட்டமன்றத்தில்கூட பெரியக் கட்சி இந்தக் கட்சிதான்.

அதைப்போல, தற்போதைய 14-ஆவது நாடாளுமன்றத்தின் 222 உறுப்பினர்-களில் 18 பேர் மட்டுமே ஒரேக் கட்சியின் செல்வாக்கில் வென்றவர்கள். அவர்கள் பாஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். கிளந்தான் மாநிலத்தில் 9 எம்பி-க்கள், திரங்கானுவில் 6 பேர், கெடாவில் மூவர் என 18 நாடாளுமன்றத் தொகுதிகளை தனித்து வென்ற பெருமை இந்தக் கட்சிக்கு உண்டு.

நாட்டை 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுவரும் அம்னோ கட்சிக்குக்-கூட இந்த ஆற்றல் கிடையாது. ஆனாலும், மூன்று மாநிலங்களில் மட்டும்தான் பாஸ் கட்சிக்கு ஆதரவும் செல்வாக்கும் இருக்கிறடேத் தவிர, தேசிய அளவில் பரந்துபட்ட ஆதரவு இந்தக் கட்சிக்கு இல்லை.

14-ஆவது நாடாளுமன்றம் உருவானதில் இருந்தே பாஸ் கட்சியின் போக்கும் கருத்தும் அப்பட்டமான ஜனநாயக அத்துமீறலாக இருக்கிறது.

நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி அமைவதற்கு முன்பே, மகாதீர் நாட்டு மக்களிடம் தெளிவாக சொன்னார், 14-ஆவது பொதுத் தேர்தலில் நம்பிக்கைக் கூட்டணி வென்றால் நான் சுமார் 2 ஆண்டுகளுக்கு பிரதமராக இருந்துவிட்டு, பின் டத்தோஸ்ரீ அன்வாரிடம் பதவியை ஒப்படைப்பேன். எனக்கும் வயதாகிவிட்டது என்று 2017 நவம்பர் 6-ல் நாட்டு மக்களிடம் தெரிவித்தார்.

ஆட்சி அமைந்தபின், பிரதமர் பதவியைவிட்ட நகர மறுத்தார். இது குறித்து அன்வார் தரப்பில் கோரிக்கை எழுந்தபொழுதெல்லாம் மகாதீர் மல்லுக்கு நின்றது ஒருபுறமிருக்க, அந்த வேளைகளில், ஐந்தாண்டு தவணை முழுவதும் மகாதீரே பிரதமராக நீடிக்க பாஸ் அதரவு அளிக்கும் என்று அடுத்த வீட்டு சிக்கலில் தேவையின்றி தலையிடுவதைப் போல ஒவ்வொரு முறையும் பாஸ் கட்சி தெரிவித்தது. பாஸ் கட்சியின் ஆதரவை மகாதீரும் கேட்கவில்லை அன்வாரும் நாடவில்லை. அப்படி இருந்தபொழுது நம்பிக்கைக் கூட்டணி-யின் உள்விவகாரத்தில் தேவையின்றி தலையிட்ட பாஸ், ஜனநாயக நெறியை காலிலிட்டு மிதித்தது.

கடைசியில், மகாதீரும் ஏமாந்து, அன்வாரும் ஏமாற்றப்பட்ட நிலையில் நாட்டில் இப்பொழுது கொல்லைப்புற ஆட்சிகளின் அத்தியாயம் தொடர்கிறது.

இந்த நிலையில், கடந்த குறுகியகால நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி “துரித உணவைப் போன்றது” என்றும் பிரதமர் பதவிக்காக அடித்துக் கொண்டனர் என்றும் குருட்டுத்தன கருத்தை வெகு அண்மையில் வெளிப்படுத்தியது பாஸ்.

நாட்டின் பெருந்தலைவர்களும் அமைச்சர்களும் கைநிறைய வருமானம் கிடைத்தாலும் ஏன் தொடர்ந்து லஞ்ச-ஊழலில் ஈடுபடுகின்றனர் என்பதைப் பற்றி சிந்திக்காமல்.., கருத்து சொல்லாமல்.., நாட்டில் ஊழலும் லஞ்சமும் இடம்பெறுவதற்கு மலாய்க்காரர் அல்லாதவர்களும் முஸ்லிம் அல்லாதவர்-களும்தான் காரணம் என்றால், ஹடி அவாங்கில் சிந்தனையில் ஏதோ கோளாறு நேர்ந்துள்ளது.

ஒன்றுமட்டும் தெளிவாகிறது. மதவாகக் கட்சியான பாஸ், இப்பொழுது இனவாதக் கட்சியாகவும் புதிய பரிமானம் பெற்றுள்ளது குறிப்பாக, மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் வளர்ந்துவரும் இன-மத அடிப்படையிலான வலதுசாரி அரசியலுக்கு மலேசியாவும் தயாராகிறதோ என்ற ஐயமும் கூடவே எழுகிறது.



நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# இவ்வார ராசிபலன்

## 02-09-2022 வெள்ளி தொடக்கம் 08-09-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையக்கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரீயல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீர்கள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோஷம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்ப வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P

(தொடர்ச்சி 29 பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,U




**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வாழ்த்துக்கள் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,U

சினிமா

# என் தந்தை இளையராஜா செய்ததை தப்பித்தவறி கூட செய்ய மாட்டேன் என்கிறார் அவரது மகன் கார்த்திக் ராஜா



திருச்சியில் வரும் செப்டம்பர் 24ம் தேதி “பொன்மாலை பொழுது” என்கிற இசை நிகழ்ச்சியை இளையராஜாவின் மூத்த மகன் இசையமைப்பாளர் கார்த்திக்ராஜா நடத்துகிறார். இது தொடர்பாக, திருச்சியில் இன்று கார்த்திக் ராஜா செய்தியாளர்களிடம் கூறியதாவது: கோலாலம்பூரில் ஏற்கனவே ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறேன். அதே போல, மதுரையில் சங்கீத திருவிழா என்ற பெயரில் ஒரு இசை நிகழ்ச்சி நடத்தி இருக்கிறேன். அதற்கடுத்து தற்பொழுது திருச்சியில் முதல்முறையாக மிகப்பிரமாண்டமான முறையில் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தவிருக்கிறேன். இந்நிகழ்வில் ஏராளமான ரசிகர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த நிகழ்ச்சியில், இளையராஜா மற்றும் எனது திரைப்படப் பாடல்கள் இசைக்கப்படும். ராயல்டி உள்ளிட்ட பிரச்சனைகள் காரணமாக யுவன்சங்கர் ராஜா பாடல்கள் இசைக்கப்படாது. இந்திய அளவில் பிரபலமான ஹரிஹரன், சாதனா சர்கம் பங்கேற்றாலும் ஹிந்திப் பாடல்கள் பாடப்படாது. தமிழ் பாடல்கள் மட்டுமே இசைக்கப்படும்.

எனது தந்தை இளையராஜா பயன்படுத்துவது போல வெளிநாட்டு கலைஞர்களை இந்த இசை நிகழ்ச்சிக்கு பயன்படுத்த மாட்டேன். உள்ளூரில் உள்ள கலைஞர்களை வைத்தே அதே தரத்துடன் வழங்குவோம். ஏற்கனவே, எனது தந்தை இதுபோன்று வெளிநாட்டு கலைஞர்களை வைத்து நிகழ்ச்சி நடத்தும் பொழுது நடக்கும் ஒத்திகைக்கு என்னை தான் நியமிப்பார். அப்போது அவர்களிடம் இருந்து பல நுணுக்கங்களை கற்றுத் தெரிந்திருக்கிறேன். அதை கண்டிப்பாக இந்த நிகழ்ச்சியில் பயன்படுத்துவேன். எனது தந்தை எனக்கு இசை நுணுக்கங்கள் எல்லாம் கற்றுத் தந்ததில்லை. “மற்றவர்களுக்கெல்லாம் சொல்லித் தருகிறீர்கள். எனக்கு ஏன் சொல்லித் தர மாட்டீர்கள்?” என்று அவரிடம் நான் நேரடியாகவே கேட்டு இருக்கிறேன். ஒருமுறை “ஆல்பம்” திரைப்படத்திற்காக “செல்லமே செல்லம் என்றாயடி” என்ற பாடலுக்கு கம்போசிங் செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது தந்தை ஸ்டியோவுக்குள் வந்திருக்கிறார். அதை நான் கவனிக்கவில்லை. அந்த பாடல் வரிகள், “செல்லமே செல்லம் என்றாயடி.. அத்தான் என்று சொன்னாயடி..” என்று பாடலின் இறுதியில் வரும். அதை காதில் கேட்ட எனது தந்தை, என்னை தனியாக அழைத்து, அது என்ன நாயடி.. நாயடி..? என்று பாடல் கேட்கிறது என்றார். உடனே நான் அவரிடம் நீங்கள் ஏற்கனவே விஜயகாந்த் நடித்த திரைப்படம் ஒன்றுக்கு இதேபோல தான் நீங்கள் ஒரு பாட்டு போட்டு இருக்கிறீர்கள் என்றேன். அதுக்கு அவர் என்னை “ஏய்..” என்றார். அதற்குமேல் அவரிடம் பதில் எதுவும் எதிர்பார்க்க முடியாது, எனக் கூறினார்.

“யுவன் சங்கர் ராஜா போன்று உங்களுக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நினைக்கிறீர்களா?” என்ற கேள்விக்கு, “மிகப்பெரிய இயக்குனர்கள், மிகப்பெரிய நடிகர்களுடன் வேலை செய்தால் மிக வேகமாக வளரலாம். அதிக புகழ்ப் பெறலாம் என்பது ஒரு உண்மைதான்.

ஆனால் நான் யாரை பார்த்தும் வருத்தப்பட்டது இல்லை. யாருக்கு எந்தெந்த நேரத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று கடவுள் விதித்திருக்கிறானோ, அந்த நேரத்தில் அது கண்டிப்பாக நடக்கும். நான் இப்பொழுது திருச்சியில் நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்பது கடவுளுடைய விருப்பமாக இருக்கிறது. அதை நான் செய்கிறேன். தாமதமாக கிடைத்தாலும் கண்டிப்பாக எனது, என்னுடைய வாய்ப்பு எனக்கு கிடைத்தே தீரும். அதுவரை எனது வேலையை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன். தற்போது, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில், 12 திரைப்படங்களுக்கு இசையமைத்து வருகிறேன், என்றார்.


Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Holiday Party
- Children's Party
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# ஜீவன் முக்தி 590

*(சென்ற வார தொடர்ச்சி)*

பிள்ளைகளை ஒன்று திரட்டிச் சென்று சுத்தம் செய்து உதவுவோம். அதனால் நாங்கள் போனால் அங்கு மீதமிருக்கும் பிரசாதத்தைக் கையில் கொடுத்து விடுவார்கள். மிச்சம் மீதி இருந்ததென்றால் அப்படியே எங்களிடம் கொடுப்பார்கள்.

அந்தப் பணியாளர்களோடு ஏற்கெனவே பழக்கம் இருந்ததால் அவரிடம் சென்று "எங்கள் வீட்டுப் பிள்ளையாருக்குச் சோறு வைக்க வேண்டும். கொடுங்கள்" என்று கேட்டேன். அவர் கைநிறைய கொடுத்து அனுப்பினார். ஒரு இரண்டு கை அள்ளி வைத்துக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

வேகவேகமாக எடுத்துக்கொண்டு வந்து பிள்ளையாருக்கு முன் அதே பிரசாதத்தை வைத்து விட்டு "இதோ பார் நீ சாப்பிடுகிற அதே சாப்பாடு அதே டயட் இது வேறு சமையல் இது சரியில்லை என்று இப்போது நீ சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டே இருந்தேன்.

அன்றைக்கும் அவர் சாப்பிடவேயில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தார். அன்றைக்கும் தோண்டியில் வைத்து தண்ணீரில் போட்டுப் போட்டுப் பார்த்தேன். அப்போதும் சாப்பிடவில்லை. வேறு ஒன்றும் செய்யத் தெரியாமல் எடுத்து மேலே வைத்து விட்டேன்.

அன்றைக்கு இதற்கு ஒரு முடிவு வேண்டும் என்று யோசனை செய்யத் துவங்கினேன். "நான் கொடுக்கும் சாப்பாட்டை மட்டும் சாப்பிடவில்லையே. என்ன காரணம்?" என்று யோசிக்கத் துவங்கினேன்.


அன்று மிகவும் துக்கமாகி விட்டது. அது வரையிலுமாவது ஒரு காரணம் இருந்தது. வீட்டுச் சமையல் பிடிக்கவில்லை போல அதனால்தான் சாப்பிடவில்லை என்று.

இப்போது அவர் கோயிலில் சாப்பிடுகிற அதே சாப்பாட்டை எடுத்துக்கொண்டுவந்து வைத்தும் சாப்பிடவில்லை என்றால்...? நம்மீதுதான் ஏதோ தப்பு இருக்கிறது என்று தாங்காத துக்கம் பொங்க ஆரம்பித்து விட்டது.

துக்கத்திற்கே பெரிய சக்தி உண்டு. உங்களை உள்முகமாகத் திருப்பி விடும் சக்தி துக்கத்துக்கு உண்டு.

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். துக்கத்தை மட்டும் சபிக்கவே சபிக்காதீர்கள்.

பல நேரத்தில் உங்களை உள்முகமாகத் திருப்பி ஆழமான மனிதராக மாற்றிவிடும். ஒரு பெரிய சக்தி துக்கத்திற்கு உண்டு.



பொங்கிவந்த அந்தத் துக்கம் 'பளிச்' என்று ஒரு தெளிவை ஏற்படுத்தியது. "ஆஹா! நம்பியாண்டார் நம்பி அவரை வருத்திக்கொண்டதனால் விநாயகர் சாப்பிட்டார்.

நாமோ விநாயகரை வருத்திக் கொண்டிருக்கிறோமேடா. அதனால்தான் சாப்பிடவில்லை." என்ற இந்தத் தெளிவு பிறந்தது.

அந்தர் முகமாகத் திரும்பிய உடனே ஏற்படுகிற, அந்தத் தீட்சைக்குப் பின் விளக்கம் பிறந்தது.

நன்கு புரிந்துகொள்ளுங்கள். இது ஒரு ஆழமான திருப்புமுனை என்று சொல்லலாம். என்னுடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட பெரிய திருப்புமுனை.

இப்போது, இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகக்கூட உங்களுக்கு இருக்கலாம். அது ஒரு பெரிய நிகழ்ச்சியாக உங்களுக்குத் தோன்றாமலும் இருக்கலாம்.

ஆனால், அந்த வயது பையனுக்கு அது ஒரு பெரிய நிகழ்ச்சி. அந்த வயதில் எனக்கிருந்த அறிவுக்கு, எனக்கிருந்த அந்தத் தேடுதலுக்கு மிகப் பெரிய நிகழ்ச்சி.

ஏனென்றால், அந்த சிறுவயதில் யாரும் அவ்வளவு ஆழமாக யோசனை செய்யமாட்டார்கள்.

பல நேரத்தில், உங்களை உள்முகமாகத் திருப்பி, ஆழமான மனிதராக மாற்றிவிடும். ஒரு பெரிய சக்தி துக்கத்திற்கு உண்டு.

புரியவும் புரியாது. மிஞ்சிப் போனால் அப்போது எனக்கு ஏழு எட்டு வயதிருக்கும் என்று நினைக்கிறேன். அதற்குமே குறைவு. அவ்வளவுகூட கிடையாது. கோயிலில் போய் சிறு பிள்ளையாக விளையாடிக் கொண்டிருக்கிற பருவம்.

திடீரென்று "ஆஹா! நம்பியாண்டார் நம்பி தம்மை வருத்திக் கொண்டார். அதனால் விநாயகர் சாப்பிட்டார். நாம் என்ன செய்கிறோமென்றால் விநாயகரை வருத்துகிறோம். அவரை மிரட்டுகிறோம். அதுதான் தவறு" என்று "பளிச்" என்று உள்ளுக்குள்ளே அந்தத் தெளிவு பிறந்தது.

உண்மை புரிந்த உடனே முடிவு செய்தேன் "ஆஹா இதுதான் காரணம் என்ற சத்தியம் புரிந்தது.

அதாவது சத்தியம் புரிந்து விட்டால் அதைக் கடைப்பிடிப்பதற்கான சிரத்தை உள்ளே உருவாகிவிடும். அந்த நம்பியாண்டார் நம்பி கதையை ஏற்கெனவே கேட்டதனாலும் இந்த இரண்டு மூன்று நாட்களும் தவறான மார்க்கத்திலே முயற்சி செய்ததனாலும்... அந்தத் தவறான மார்க்கத்தில் முயற்சி செய்ததற்கான கூலி "முயற்சி செய்வது" என்ற மனப் பழக்கம் வருவதே!

தவறான மார்க்கமாக இருந்தால் கூட கவலைப்படாதீர்கள். முயற்சி செய்யுங்கள். காரணம் என்னவென்றால் முயற்சி செய்கிற மனப்பழக்கம் வந்து விடும். அதுவே மிகப்பெரிய கொடுப்பினை.

ஏற்கெனவே இந்த முயற்சியைச் செய்ததாலும் நம்பியாண்டார் நம்பி கதை கேட்டதனாலும் சத்தியத்தை வாழுகிற சிரத்தை வந்துவிட்டது.

அது மட்டும் இருந்தது என்றால் மருந்து வைத்த பீரங்கி போன்று சத்தியம் புரிந்த அந்த விநாடியே நெருப்பு வைத்து விட்டதும் வெடித்துவிடும். சத்தியம் புரிவது நெருப்பு வைப்பது மாதிரி.

சிரத்தை இல்லாமல் இந்தச் சத்தியத்தை வாழுகிற சிரத்தை இல்லாமல் நெருப்பே வைக்கப்பட்டாலும் தீக்ஷையே நடந்தாலும் அதனால் உபயோகம் இல்லை. அது காலி பீரங்கிக்குத் தீப்பந்தத்தை வைத்து நெருப்பு வைப்பது போலாகும். அதனால் ஒன்றும் நடப்பதில்லை.

அதேபோன்று சிரத்தை மட்டும் இருந்து அந்தத் தீக்ஷை நடக்காமல் இருந்தாலும் மருந்து மட்டும் இருக்கும் பீரங்கி போன்றது. அதுவும் வெடிக்காது.

இந்தத் தீக்ஷை எனக்குள் ஏற்கெனவே மருந்து இடிக்கப்பட்ட மனம் தீப்பற்றிக் கொண்ட நெருப்புபோன்றாகிவிட்டது.

நம்பியாண்டார் நம்பி கதையினாலும் தினம்தோறும் செய்த பூஜையினாலும் தவறான முறையாக இருந்தாலும் முயற்சி செய்து அதை வாழவேண்டும் என்கிற சிரத்தை எனக்குள் எழுந்தது.

மிக அருமையாகத் திருவள்ளுவர் சொல்கிறார் "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்".

அந்த முயற்சியால், மருந்து இடிக்கப் பட்ட பீரங்கியைப் போலத்தயாராகி விட்டது. அந்தப் பீரங்கி தயாராகிவிட்டது. தீக்ஷை நடந்து விட்டது!





# SHIVA DURGA ASTROLOGY CENTER








PRIVATE & CONFIDENTIAL



## PANDIT: KRISHNAM RAJU

**Solutions & Suggestions on:**

| | |
|---|---|
| Black Magic | Education, Family |
| Evil Spirits | Employment, Court |
| Jealousy | Husband & Wife |
| Health, Wealth | Children Problem |
| Business, Marriage | Business Prob. |
| Drinking Problem | Vasthu Prob |
| Love, Divorce | Real Estate |
| Visa Prob. | and all other Problems |

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

**An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection**

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

**437-213-3305**

கலாநிதி ஸ்ரீமான் செல்வத்துரை குருபாதம் அவர்களின்

# ஓராண்டு நிறைவும் நினைவும்

அகர வரிசையில் என் அன்புக்கவிதை
அறிவுக்களஞ்சியமாம், அதிலும் அட்சய பாத்திரமாம்
ஆய்வின் பொக்கிஷமாம் ஆற்றல்பல கொண்டவராம்,
இயற்கையும் இயல்புமாம், இங்கிதம் நிறைந்தவராம்,
ஈன்றெடுத்த நூல்களையும் ஈதலில் வள்ளலாம்
உலகத்தமிழ் வானொலியாம் கீதவாணியில் பேச்சாளராம்,
ஊற்றெடுக்கும் எண்ணங்களால் ஊடகங்களில் ஆளுமையாம்
எதற்கும் எமனுக்கும் அஞ்சாதவராம் எல்லோராலும் போற்றப்படுபவனாம்
ஏடுகள் பல படைத்து ஏற்றத்தாழ்வு அற்றவனாய் வாழ்ந்து
ஐயம் திரிபற அறிந்தவற்றை ஐயமின்றியே சொற்சிலம்பாடி
ஒன்றே குலமென்றும் இயற்கையே தெய்வம் என்றும்
ஓங்கி எழுந்த பண்புடன் ஒவ்வொருவரின் சந்தேகத்திற்கும்
ஔஷதமாய் வந்துதித்த தோழரே குருபாதமே
ஃதும் ஐயமின்றி உங்கள் மலரடியில் இதை சமர்ப்பிக்கின்றேன்
எங்கேயிருந்து சிந்திக்கின்றீர்களோ!!! மீண்டும்
உங்களைத்தான் சந்திக்க முடியுமா??

அன்புத்துயருடன் என்றென்றும் உங்கள் ஜெயா
திருமதி. ஜெயஜோதி குருபாதம் (nee Paramsothy)
Teacher: TDSB, Canada &
வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
(முன்னாள் ஆசிரியை)
Tel: (416) 398-7241

திதி: 07.09.2022



## Hon. Dr. S. Gurupatham

ஓராண்டு நிறைந்தாலும் உங்கள் அன்புக்காக ஏங்குகின்றோம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS "Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1378 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 2, 2022

# மலேசியத் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்த கனடா சரவணபவன் உணவகங்களின் அதிபர் கணேசன் சுகுமார்




அண்மையில் கனடா ஹலிபக்ஸ் நகரில் நடைபெற்ற **(Commonwealth Countries)** பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளவென மலேசியத் திருநாட்டிலிருந்து வருகை தந்திருந்த எகிரி மாநில சட்டசபையின் துணை சபா நாயகர் திரு ரவி முனுசாமி. சட்டசபை உறுப்பினர் குணா குணசேகரன் ஆகியோர் தற்போது ரொறன்ரோ மாநகருக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த வகையில். திரு ரவி முனுசாமி அவர்களையும் குணா குணசேகரன் அவர்களையும் தனது ஸ்கா-புறோ அழைத்து விருந்தளித்து மகிழ்ந்தார் கனடா சரவணபவன் சைவ உணவகங்களின் அதிபர் கணேசன் சுகுமார் அவர்கள்.

படத்தில் கனடா சரவணபவன் உணவக ஸ்கா-புறொ கிளையில் "துணை சபா நாயகர் திரு ரவி முனுசாமி சட்டசபை உறுப்பினர் குணா குணசேகரன் ஆகியோருடன் திருவாளர்கள் கணேசன் சுகுமார். முகாமையாளர் முஜாஹிட் ஜலால்.. உதயன் நண்பர் பாஸ்டர் சோதி செல்லா சரவணபவன் உணவகத்தின் சமையல் வல்லுனர் நாராயணசாமி ராமசாமி. உதயன் லோகேந்திரலிங்கம ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

**LJI Journalists Ganesh and Arjune**

# கனடாவில் "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் அவர்களுக்கு இரண்டு அரச கௌரவங்கள்



*(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)*

கடந்த வாரம் கனடாவிற்கான இசைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்த "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் அவர்களுக்கு இரண்டு அரச கௌரவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதை கனடா வாழ் இந்திய மற்றும் இலங்கை மக்கள் பாராட்டி அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். "இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் அவர்களை தனது குயின்பார்க் அலுவலகத்திற்கு அழைத்து தனது உத்தியோகபூர்வ இருக்கையில் மகிழ்ச்சியுடன் அமரச் செய்து பெருமையுடன் அவரைப் பாராட்டினார் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட். மேலும் அவரது பெயரில் மார்க்கம் நகரசபை எல்லைக்குள் ஒரு வீதிப் பலகையை திறந்து வைத்தார் மார்க்க நகரசபை மேயர் பிராங்க் ஸ்கெபட்டி.

(உள்ளே விபரமான செய்தியும் படங்களும் 4ம் பக்கத்தில்)

# ரொறன்ரோ விமான நிலையத்தில் கனடா தமிழ் அன்பர்களால் வரவேற்கப்பெற்ற யாழ் மாநகர மேயர் வி. மணிவண்ணன்





கடந்த 27ம் திகதி சனிக்கிழமையும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற கனடிய தமிழர் பேரவையின் "தமிழர் தெருவிழா" கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக அழைக்கப்பெற்ற யாழ்ப்பாண மாநகர மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் அவர்கள் கடந்த வெள்ளியன்று இரவு தனது துணைவியார் சகிதம் கனடா ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அப்போது அவரை வரவேற்கச் சென்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையக சிரேஸ்ட உபு தலைவர் திரு சிவா கணபதிப்பிள்ளை. வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நலலதம்பி. ஸ்ரீதரன் தவராஜா. பிரபா. சமூக சேவையாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோருடன் எடுக்கப்பெற்ற படங்களில் காணப்படுகின்றனர்

தொடர்ச்சியாக கனடாவில் பல நிகழ்ச்சிகளிலும் சந்திப்புக்களிலும் கலந்து கொண்ட யாழ்ப்பாண மேயர் மணிவண்ணன் அவர்கள் நேற்று எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அழைப்பின்பேரில் ஒட்டாவா மாநகருக்குச் சென்று அங்கு சில அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்த பின்னர் நேற்று இரவு ரொறன்ரோ திரும்பினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**LJI Journalists Ganesh and Arjune**

# "யுகம் வானொலி" ஊடாக தமிழ் மக்களுக்கு தனது வாழ்த்துக்க்ளைத் தெரிவித்த ரொறன்ரோ நகரபிதா ஜோன் றோரி



கடந்த வாரம் தற்போதைய ரொறன்ரோ நகரத்தின் நகர பிதா ஜோன் றோரி அவர்கள் "யுகம் வானொலி மற்றும் யுகம்" தொலைக் காட்சி கலையகங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டார். அங்கு அவரை வரவேற்ற வானொலியின் இணைப் பங்காளர்கள் கணபதி ரவீந்திரன் மற்றும் ரூபி யோகதாசன் ஆகியோர் அவரை வரவேற்று மலர் மாலை அணிவித்தனர். அங்கு "யுகம் வானொலி" ஊடாக நேயர்களோடு உரையாடிய நகர பிதா ஜோன் றோரி அவர்கள் தமிழ் மக்களுக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

# திருமணப் பந்தத்தால் இணைந்த சாந்தலிங்கம் — குகரூபன் குடும்பத்தினர்



கனடிய வர்த்தகப் பிரமுகரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலை-வருமான சாந்தாலிங்கம் பஞ்சலிங்கம் -தம்பதியின் புதல்வி லக்கீகாவை வர்த்தகப் பிரமுகர் குகரூபன் தம்பதியின் புதல்வர் சிந்துயன் மணவாழ்க்கையில் கரம்பிடித்த திருமண நிகழ்வு கடந்த 29ம் திகதி திங்கட்கிழமையன்று மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்றது.

உற்றார். உறவினர் நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திச் சென்றனர். மணமக்களுக்கு கனடா உதயன் குடும்பத்தாராகிய எமது வாழ்த்துக்கள்.